வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 16.03.2022 புதன்கிழமை இதழ் : 101 பக்கங்கள் : 12




# ஐக்கிய மக்கள் சக்தி பேரணியில் பல்லாயிரம் மக்கள் திரண்டனர்!



★ நாடெங்குமிருந்து மக்கள் குவிவு
★ ஜனாதிபதி செயலகமும் முடக்கம்
★ சவப் பெட்டி வீசியதால் பதற்றம்!



கொழும்பு, மார்ச் 16

ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் நேற்று நடத்திய போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்தப் போராட்டத்துக்கு நாடு முழுவதுமிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

15

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபா!

### அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மார்ச் 16

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான குடும்பங்களின் வாழ்வினை மீள கட்டியெழுப்புவதற்காக ஒரு இலட்சம் ரூபாவை, ஒரு முறை மாத்திரம் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நீதியமைச்சர் அலி சப்ரி, இந்த யோசனையை அமைச்சரவையில் முன்வைத்திருந்தார்.

எதிர்காலச்

15



## சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற இணக்கம்!

கொழும்பு, மார்ச் 16

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கு அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, நேற்று முன்தினம் இலங்கை வந்த சர்வதேச நாணய

15

## சம்பந்தன் இல்ல சந்திப்பு ரெலோவும் பங்கேற்றது!

கொழும்பு, மார்ச் 16

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற சந்திப்பில் ரெலோ கட்சியின் தலைவரும், அதன் பொதுச் செயலாளரும் பங்கேற்றனர்

15

## ஜனாதிபதி தேர்தலை உடன் நடத்துங்கள்!

### மக்கள் மத்தியில் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, மார்ச் 16

"ராஜபக்ஷ அரசாங்கம் இராஜிநாமா செய்து நாட்டின் ஆட்சியை ஐக்கிய மக்கள் சக்தியிடம் ஒப்படைக்க வேண்டும் அல்லது மீண்டும்

15

## எரிபொருள் தாங்கி வாகனங்கள் நேற்றிரவு முதல் சேவை நிறுத்தம்!

கொழும்பு, மார்ச் 16

நாடளாவிய ரீதியில் எரிபொருள் விநியோக போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தாங்கி வாகனங்கள் தமது சேவைகளை இடைநிறுத்தியுள்ளன.

நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த சேவைகள் இடைநிறுத்தப்பட்டன என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனத்தின் தனியார் தாங்கி வாகன உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

இரு நாட்களுக்கு முன்னர் போக்குவரத்து கட்டணத்தை 60வீதத்தால் அதிகரிக்குமாறு

15

## கூட்டமைப்பினருடனான சந்திப்பை திடீரென நிறுத்தினார் ஜனாதிபதி!

### 25ஆம் திகதி வருமாறும் அழைப்பு!

கொழும்பு, மார்ச் 16

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேற்று நடைபெறவிருந்த சந்திப்பு திடீரென இரத்துச் செய்யப்பட்டது.

இந்த சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டமைக்கு எதிர்க்கட்சியர் நேற்று முன்னெடுத்த போராட்டமே காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும், இந்தச் சந் திப்பு எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பேச்சாளரும்

15

## ஜனாதிபதியின் விசேட உரை இன்று


கொழும்பு, மார்ச் 16

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று புதன்கிழமை இரவு 8.30 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார்.

நாட்டில் பொருட்கள் விலையேற்றம்

15

## இறுதி போர் குற்றங்களுக்கு நீதியில்லை; அரசு தன்னிச்சையாக செயல்படுகிறது!



### மன்னார் மறைமாவட்ட ஆயர்

மன்னார், மார்ச் 16

"இறுதிப் போரில் நடந்தேறிய போர்க் குற்றங்களுக்கு நீதியை நிலைநாட்டாமல் சர்வதேசத்தின் கோரிக்கைகளையும் புறந்தள்ளிவிட்டு தன்னிச்சையாக செயல்படும் ஓர் அரசாங்கமே இன்று ஆட்சியில் உள்ளது", என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இமானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை அரசானது ஈஸ்டர் தினத்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

பலத்த பிரயத்தனங்களின் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஆபிரகாம் சுமந்திரன் தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினை சந்திக்காமலே நாடுதிரும்பியிருக்கிறார்.

தமிழகத்தில் அதிகம் அறியப்படாத உலகத் தமிழ் வம்சாவழி அமைப்பு என்ற அமைப்பு சென்னையில் இரண்டுநாள் மாநாடு நடாத்தியது.

பதினொராம் பன்னிரண்டாம் திகதிகளில் இந்த விழா நடந்தது.

உலகத்தமிழ் வம்சாவளி ஒன்று கூடல், சாதனை பெண்கள் விருது வழங்கல், உலகத் தமிழ் பாராளுமன்றம் என்று இந்த இரண்டுநாள் விழா நடைபெற்றது.

அந்த உலகத்தமிழ் பாராளுமன்ற நிகழ்விற்கு இலங்கையிலிருந்து இராஜாங்க அமைச்சர் சு. வியாழேந்திரன், சுதந்திரக்கட்சி தேசியப் பட்டியில் எம்.பி. சுரேன் ராகவன், தமிழ் மக்கள் தேசிய கூட்டணி தலைவர் க. வி. விக்கினேஸ்வரன், வேலுகுமார், வி. ராதாகிருஷ்ணன், மற்றும் ஆபிரகாம் சுமந்திரன், கனடாவிலிருந்து ஹரி ஆனந்த சங்கரி, நோர்வேயிலிருந்து ஹம்சாயினி குணரட்ணம் ஆகியோருடன் பலர் அழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் பலர் இணையவழியிலேயே கலந்து கொண்டனர். ஆனால், சுமந்திரன் இதில் கலந்துகொள்வதற்காக சென்னைக்கு சென்றிருந்ததுடன், மாநாட்டு நிகழ்வுகளுக்கு வேறாக தமிழக தலைவர்களையும் சந்தித்திருந்தார். தமிழக முதல்வரை சந்திக்க அவர் தீவிர முயற்சி எடுத்ததுடன், அதற்காக பலரையும் அணுகியிருந்தார். இவர்களின் இந்த சந்திப்புக்கு புலிகள் இயக்கத்துடன் நெருக்கமாக புலம்பெயர் தேசத்தில் பணியாற்றிய சிலர் சுப. வீரபாண்டியன் மூலமாக தீவிரமாக முயற்சி செய்ததுடன் கடைசியாக, பிரபல சமயச் சொற்பொழிவாளர் சுகி சிவம் அவர்களும் தமிழக முதல்வரை இந்தச் சந்திப்புக்காக அணுகியதாக சென்னை தகவல்கள் தெரிவித்தன.

முன்னதாக சுமந்திரன், பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலையை சந்தித்திருந்தார். இந்தச் சந்திப்புக்கான ஏற்பாடுகளை உலகத் தமிழர் பேரவையின் முக்கியஸ்தர் பவன் என்பவர் செய்திருந்தார்.

பிரிட்டிஷ் பிரஜையான பவன், இந்தியாவின் பெங்களூரு நகரத்திலுள்ள பிரித்தானிய வங்கி ஒன்றில் பணியாற்றுகின்றார். அண்மையில் கூட்டமைப்பு பிரதிநிதிகள் அமெரிக்கா சென்றிருந்தபோது உலகத் தமிழர் பேரவையினரும் சென்றிருந்தது தெரிந்ததே. அந்த உலகத்தமிழர் பேரவையின் குழுவில் இந்த பவனும் இந்தியாவிலிருந்து சென்று இணைந்துகொண்டவர் என்பது 'கொசுறுத்' தகவல்.

தமிழக முதல்வரை சந்திக்க ரெலோ முயன்றுவருவது பற்றியும், அதற்கு முன்னதாக, தான் சந்தித்துவிட வேண்டும் என்று சுமந்திரன் முயற்சி செய்வது குறித்தும் இந்தப் பத்தியில் ஏற்கனவே தெரிவித்திருந்தேன்.

தமிழகம் சென்ற சுமந்திரன், ஈழத்தமிழ் மக்களுக்காக அவர்களின் பிரதிநிதியாக தமிழக முதல்வரை சந்திக்க முயல்வது நல்லதுதான்.

ஆனால், இந்தியப் பிரதமர் மோடி இலங்கை விரவிருக்கும் சமயத்தில், மோடிக்கு எதிராக அகில இந்திய அளவில் எதிரணியை ஒன்றுதிரட்ட ஸ்டாலின் முயன்றுவரும் இவ்வேளையில் சந்திப்பது சரியானதா என்றே ஊர்க்குருவி கேள்வி எழுப்பியிருந்தது.

சுமந்திரன் தமிழக முதல்வரை சந்திக்க சுப. வீரபாண்டியன் ஊடாக முயன்றபோது, தமிழக முதல்வரின் அதிகாரிகள் மட்டத்தினர் அதனை விரும்பவில்லை என்றும், அவர்கள் அதனை தவிர்க்குமாறு ஆலோசனை வழங்கியதாகவும் தமிழக தலைமைச் செயலகத்துடன் நெருங்கிய தொடர்புடைய மூத்த பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

இன்று தமிழர் தலைமை என்பது இரா. சம்பந்தனிடம் இருக்கின்றது. அவருக்குப் பின்னர் யாரிடம் அந்தத் தலைமை செல்லும் என்பது 'மில்லியன் டொலர்' கேள்வி.

யார் நினைத்தாலும், அந்தத் தலைமை யாரிடம் செல்லும் என்பதை யார் தீர்மானிப்பார்கள் என்பதும் ஒன்றும் ஆராய்ச்சிக்குரியதல்ல.

அதற்கான காய்நகர்த்தல்கள் இப்போதே ஆரம்பித்து விட்டதையே நடக்கும் சம்பவங்கள் உணர்த்துகின்றன.

**- ஊர்க்குருவி**

# யாழ்ப்பாண தமிழ் சங்கத்தின் 'சங்கப்பேழை' நூல் வெளியீடு!

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்ப்பாண தமிழ்ச் சங்கம் நடத்தும் 'சங்கப்பேழை' நூல் வெளியீடு, உலகத் தாய்மொழி நாள் பேருரை மற்றும் 2019 உயர்தரப் பரீட்சையில் தமிழ்ப் பாடத்தில் அதிவிசேட சித்தி பெற்ற வட மாகாண மாணவர்களுக்கான மதிப்பளிப்பு ஆகிய நிகழ்வுகள் வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக்கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

தமிழ்ச்சங்கத்தின் பெருந் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா கலந்து கொள்வார்.

நிகழ்வில் வரவேற்புரையை யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசனும் தமிழ்மொழி நாள் பேருரையை கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் சி. சந்திரசேகரமும் அவருக்கான அறிமுகவுரையை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் பொருளாளர் பேராசிரியர் தி.வேல்நம்பியும் 'சங்கப் பேழை' நூல் வெளியீட்டுரையை நூலின் பதிப்பாசிரியர் லோ. துசிகரனும் நூலாய்வுரையை பேராதனைப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரனும் ஆற்றுவர். நன்றியுரையை சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் கு.பாலசண்முகனும் நிகழ்ச்சி முன்னிலைப்படுத்தலை சங்கச் செயலாளர் இ.சர்வேஸ்வராவும் மேற்கொள்ளவுள்ளனர் என்று தமிழ்ச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## பஸ் சாரதியை வெட்டியவருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், மார்ச் 16

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸின் சாரதியை கோப்பாய் பகுதியில் வைத்து வெட்டி காயம் ஏற்படுத்தியவரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வாரம் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் கோப்பாய் புலனாய்வு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

சந்தேகநபர், சங்கானை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார் எனவும் மேலும் நால்வரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டில் இருக்கும் ஒருவர் பணம் கொடுத்து கைக்கூலிகளை ஏவி, இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ஐ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 16

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் நடத்தும் சமகால அரசியல் கலந்துரையாடல் நிகழ்வு உக்ரைன் - ரஷ்ய போரும் உலகளாவிய அதன் தாக்கமும் என்ற தலைப்பில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல. 62, கே. கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தியிலுள்ள தேசிய கலை, இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

தொடக்கவுரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் க. வேல்தஞ்சன் ஆற்றுவார். இதைத் தொடர்ந்து சபையினரின் கருத்துரைகளுடன் திறந்த கலந்துரையாடல் இடம்பெறும். இந்த நிகழ்வில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி அனைவரும் பங்கேற்க முடியும். (ஐ)

## பாடசாலை மாணவர்களுக்கு புத்தக பைகள் அன்பளிப்பு

மானிப்பாய், மார்ச் 16

யாழ். மாவட்டத்தில் உதவி தேவைப்படும் கீரிமலை வலி துண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப் பைகள் அன்பளிப்பாக வழங் கப்பட்டன.

பூமணி அம்மா அறக்கட்டளையின் ஸ்தாபக தலைவர் பிரான்ஸ் சர்வதேச தமிழ் வானொலி பணிப்பாளருமான சரவணையூர் விசுவாசம் செல்வராசாவின் நெறிப்படுத்தலில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் எஸ். கணேசராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அறக்கட்டளையின் இலங்கை நிர்வாகிகளான தலைவர் தனேந் திரன், செயலாளர் ந.விந்தன் கன கரட்ணம், பொருளாளர் ரி. யோசேப், உப செயலாளர் இ. சற்குருநாதன், ஆலோசகர் இ.மயில்வாகனம் ஆகியோர் பங்கேற்று மாணவர்களுக்கு புத்தகப் பைகளை வழங்கி வைத்தனர். (ஐ - 5)

## பாடசாலை வாகனங்களுக்கான குறைந்தபட்ச கட்டணம் ரூ. 1000!

கொழும்பு, மார்ச் 16

அண்மைக்காலமாக எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் மாதாந்த போக்குவரத்து கட்டணத்தை அதிகரிக்க அகில இலங்கை பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சங்கம் தீர்மானித்துள்ளது.

சங்கத்தின் செயலாளர் லலித் சந்திரசிறி பெர்னாண்டோ, பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக் கட்டணம் குறைந்தபட்சம் ரூ. 1,000 மற்றும் அதிகபட்சம் ரூ. 2,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அண்மைய எரிபொருள் அதிகரிப்புக்கு ஏற்ப விலையை அதிகரிக்கவேண்டுமாயின் மாதாந்த கட்டணத்தை 45 முதல் 100 வீதம் வரை அதிகரிக்கவேண்டுமென சந்திரசிறி பெர்னாண்டோ தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பொது மக்களுக்கு எவ்வித சம்பள அதிகரிப்பும் வழங்கப்படவில்லை என்பதனை கருத்தில் கொண்டு பெயரளவிலான அதிகரிப்பை மேற்கொண்டுள்ளதாக அவர் கூறினார். (அ)

## இரண்டு மதுபானப் போத்தல்களினால் 100 அதிரடிப்படையினர் இடமாற்றம்!

கொழும்பு, மார்ச் 16

இரண்டு மதுபான போத்தல்களை சிறைச்சாலை வளாகத்திற்குள் கடத்த முயற்சித்த குற்றச்சாட்டில் பூஸா சிறைச்சாலையின் பாதுகாப்பில் கடமையாற்றிய 100 விசேட அதிரடிப்படையினர் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

2022, மார்ச் 11ஆம் திகதி பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு மதுபானம் கடத்த முற்பட்டபோது சிறப்பு அதிரடிப்படை அதிகாரி ஒருவர் பிடிபட்டார்.

இதனையடுத்து சிறைக்குள் மதுப் போத்தல்களை எடுத்துச் செல்ல அனுமதிக்காததன் காரணமாக சிறை அதிகாரிகளுக்கும் சிறப்பு அதிரடிப்படையினருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் பின்னர் கைகலப்பாக மாறியது.

இந்தநிலையில் சிறைச் சாலைகள் திணைக்களம் மற்றும் சிறப்பு அதிரடிப்படை ஆகிய இரு தரப்பினராலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகளின் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, இந்த இடமாற்றங்களுக்கு மேலதிகமாக சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என சிறப்பு அதிரடிப்படையின் கட்டளைத் தளபதி வருண ஜய சுந்தர தெரிவித்துள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu
16.03.2022 புதன்கிழமை
பிலவ வருடம், பங்குனி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# நாடு - எதை நோக்கி?

நாட்டின் நிலைமை தொடர்ந்தும் மோசமடைந்து செல்கின்றது. நாடு முப்பது வருடங்களும் மேலாக, உள்நாட்டு யுத்தத்திற்குள் இருந்த போதுகூட, இது போன்றதொரு நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்க வில்லை. அரசாங்கத்தின்மீதான நம்பிக்கை நாளுக்கு நாள் தொடர்ந் தும் வீழ்சியடைந்து செல்கின்றது. ஜனாதிபதியை பதவிக்கு கொண்டு வருவதில் முன்னின்று உழைத்த பலரும் அதிருப்தியடைந்து, பொது வெளிகளில் அரசாங்கத்திற்கு எதிராக பேசிவருகின்றனர். ஆரம்பத்தில் அனைத்து பிரச்னைகளுக்கும் பெருந்தொற்றையே ஒரு காரணமாகப் பார்த்தனர். ஆரம்பத்தில் ஓரளவு இது ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால், அந்த நிலைமைகளில் தற்போது பெரியளவில் மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன.

ஏனெனில், கொரோனா பெருந்தொற்றால் அனைத்து நாடுகளுமே பாதிப்படைந்திருக்கின்றன. செல்வந்த நாடுகளை தவிர அனைத்து சிறிய நாடுகளும் இலங்கை எதிர்கொண்டது போன்ற, நெருக்கடியைத் தான் எதிர்கொண்டிருந்தன. ஆனால், இலங்கை போன்று, இந்தள விற்கு மோசமான நிலைமையை அந்த நாடுகள் எதிர்கொள்ளவில்லை. சிறந்த நெருக்கடி கால முகாமைத்துவத்தின் ஊடாக தங்களின் சவால் களை அவர்கள் எதிர்கொண்டிருந்தனர்.

இதுபோன்ற நெருக்கடிகள் ஏற்படுகின்றபோது, கடைப்பிடிக்க வேண்டிய அரசியல் ஒழுங்கில் எங்கோ பிரச்னையிருக்கின்றது. இதன் காரணமாகவே இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்திருக்கின்றது. ஆரம்பத்திலேயே சர்வதேச நாணய நிதியத்தை அணுகியிருந்தால், இந்த நெருக்கடியை ஆரம்பத்திலேயே சமாளித் திருக்க முடியுமென்னும் கருத்தை பல பொருளாதார நிபுணர்களும், எதிரணி அரசியல் தலைவர்களும் தெரிவித்திருந்தனர். ஆனால், அரசாங்கம் அதற்கு இணங்கியிருக்கவில்லை. அடம்பிடித்தது.

ஆனால் தற்போது, சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனை களைப் பெறுவதற்கு அரசாங்கம் இணங்கியிருப்பதாக செய்திகள் வெளிவருகின்றன. இதனை ஆரம்பத்திலேயே செய்திருக்க முடியும். தற்போதுள்ள சூழலில், வெளியாரின் உதவியில்லாமல் அரசாங்கத் தால் ஓர் அடி கூட முன்நோக்கி நகர முடியாது. சாதாரண மக்களின் பொருளாதார சுமைகள் நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றன. இவ்வாறான சூழலில் மக்கள் வீதிக்கு வருவதற்கான சந்தர்ப்பங் களே அதிகம்.

பொதுவாக தென்பகுதியில் அரசியல் நெருக்கடிகள் ஏற்படுகின்ற போது - விடுதலைப் புலிகளின் பக்கமாக சிங்கள மக்கள் திருப்பப்படுவதுண்டு. 'கொட்டி' பிரச்னைதான் அனைத்துக்கும் கார ணம் என்றவாறு பிரசாரங்கள் முடுக்கிவிடப்படுவதுண்டு. தற்போது சிங்கள மக்களை திசைதிருப்புவதற்கு எந்தவோர் உபாயமும் இல்லை. 'கொட்டி' கதை இனிவரும் காலத்தில் தென்பகுதி அரசியலில் எடுபடுவது கடினம். அதேவேளை போர் வெற்றியை முதலீடாக்கும் அரசியல் உபாயங்களும் இனி முன்னரைப் போல் கைகொடுக்கப் போவதில்லை. இந்த நிலையில், அரசாங்கம் நிமிர்வதும் - வீழ்வதும், முற்றிலும் அரச தலைவர்களின் திறமையிலும், உழைப்பிலுமே தங்கியிருக்கின்றது. ஆனால், இந்த நிலைமை தொடர்ந்தால் எவர் ஆட்சியில் அமர்ந்தாலும் பொருளாதார ரீதியில் நாட்டை மீட்டெடுப்ப தென்பது, முயலில் கொம்பு தேடும் முயற்சியாவே அமையலாம். ஒரு நாடு பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலைக்குள் விழுமாக இருந்தால், அந்த நாட்டின் சமூக, அரசியல் ஒழுங்குகளும் சீர்குலை யும். இது நாட்டை மேலும் அதலபாதாளத்தை நோக்கி கொண்டு செல்லும்.

# இலங்கை பொருளாதார நெருக்கடி; அவதிப்படும் மலையக தமிழர்கள்

**ரஞ்சன் அருண் பிரசாத்**

*உலக பெருந்தொற்றான கோவிட் வைரஸ் தொற்று உள்ளிட்ட காரணங்களினால் பாரிய பொருளாதார நெருக்கடியை இலங்கை நாளுக்கு நாள் சந்தித்து வருகின்றது. இலங்கையில் இதுவரை நிலையாக பேணப்பட்டு வந்த அமெரிக்க டொலர், கடந்த வாரம் முதல் நெகிழ்வு போக்குடன் தீர்மானிக்க இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்திருந்தது. டொலருக்கான தட்டுப்பாடு அதிவுயர் மட்டத்தை அடைந்த பின்னணியிலேயே, இலங்கை மத்திய வங்கி இந்த தீர்மானத்தை எட்டியது.*

*லயின் வீடுகளில் வாழும் இந்த மக்கள், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், இன்று ஒரு வேளை அல்லது இரண்டு வேளை உணவை மாத்திரமே உட்கொண்டு வருவதாக தெரிவிக்கின்றனர். லூல்கந்துர பகுதியைச் சேர்ந்த பரிமளா இவ்வாறு கருத்து தெரிவித் தார்.*

*""இன்னைக்கு மா 140 ரூபா. எங்களுக்கு கஷ்டம் தான். சாப்பாடுக்கும் கஷ்டம் தான். நான் வேலைக்கு போனா தான். இல்லாட்டி இல்ல. வீடு வசதியும் இல்ல. வேல செய்றவங்களுக்கு மட்டும் தான் வீடு. ஒரு நாளைக்கு வேல செய்தா 600 ரூபா தான் கிடைக்கும். வருமானம் பத்தாது. வேலை செய்ற இடத்துல சம்பளத்த கூட்டி கேட்டா, எங்களுக்கு இவ்வளவு தான் கொளுந்து, இவ்வளவு தான் கொடுக்க முடியும் என்பாங்க. வேலய செய்துட்டு, பேசாம வீட்டுல வந்து இருப்பேன்" என பரிமளா தெரிவித்தார்.*

*அதே பகுதியைச் சேர்ந்த பூபதி இவ்வாறு தனது கஷ்டத்தை பகிர்ந்து கொண்டார்.*

*""ஒரு காணியும் கொடுக்குறாங்க இல்ல. வேறு ஒன்னும் கொடுக்குறாங்க இல்ல. அரிசி மா இந்த விலையா இருக்கு. நாங்க எப்படி சாப்பிடுறது. அரிசி இந்த விலை. மா இந்த விலை. மரக்கறி இந்த விலை. சீனி இந்த விலை. எப்படி இந்த பிள்ளைகளுக்கு சாப் பாடு கொடுத்து வளக்குறது. காப்பாத்துறது. எங்களுக்கு கால சாப்பாடுக்கு ஒன்றரை சிண்டு அரிசி வைக்கனும். பகல் சாப்பாடு. ஒரு நேரம் சாப்பிடுறோம். ஒரு நேரம் சாப்பிடாமலும் இருக்கிறோம். நாங்க மூன்று நேரமும் கணக்கு பன்னி சாப்பிட போனோ முனா, எங்க நிலைமை என்னாகும்? ஒரு நேரம் சாப்பாடு இல்லாம, ரெண்டு நேரம் சாப்பாடு சாப்பிட்டு தான் குடும்பம் கொண்டு போறோம். இப்ப கிட்டத்துல அரிசி மாவு எல்லாம் விலை கூடினதுக்கு பிறகு தான்" என பூபதி தனது கவலையை தெரிவித்தார்.*

*வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்க செல்லவே பயமா இருக்கு என லூ ல்கந்துர பகுதியைச் சேர்ந்த யோக லெட்சுமி தெரிவிக்கின்றார்.*

*""வார வருமானம் பத்தாது. வேல செய்றோம். தோட்டத்துல தான் வேல. கால யில சாப்பிட மாட்டோம். தேதனி ஒன்னு குடிச்சிட்டு போவோம். 10, 11 மணிக்கு தான் சாப்பிடுவோம். பகலைக்கு 2 மணிக்கு சாப்பிடுவோம். கொளுந்து எடுக்கனும் பெய ருக்கு. இல்லனா அரை பெயரு. கொளுந்து எடுத்தா தான் பெயரு. ஆனால் கொடுக்குற சம்பளம் பத்தாது. 20,000தை கொண்டு போனாலும், 10,000 ரூபா பெறுமதியான சாமானை தான் வாங்க முடியுது இன்னைக்கு. தேத்தனி குடிக்கயில. மாவு அரவே இல்ல. நான் ஒரு ஆள் தான் வீட்டு வேல செய்றேன். மாசம் 12,000 ரூபா சம்பளம் வாங்கினாலும், பத்தாது. விலைவாசிக்கு சாமான் எடுக்க போகவே பயமா இருக்கு" என யோக லெட் சுமி தெரிவிக்கின்றார்.*

*இலங்கையின் பொருளாதாரத்தின் முது கெலும்பாக இருக்கும் இந்த மலையக மக்கள், அன்று முதல் வாழ்வதற்கு கூட முடியாத நிலையில் தமது வாழ்நாட்களை கடத்தி வந்த பின்னணியில், வாழ்க்கை செலவு பல மடங்காக அதிகரித்துள்ளமை, அவர்களை மேலும் வறுமை கோட்டின் அடி மட்டத் திற்கே கொண்டு சென்றுள்ளமையை அவர் களை சந்தித்த எம்மால் காண கூடியதாக இருந்தது.*


*தேயிலை செய்கை உருவான இந்த லூ ல்கந்துர பகுதிக்கு செல்வதற்கு கூட ஒரு சரியான பாதை இல்லாமை, போக்குவரத்து வசதிகள் இல்லாமை, மருத்துவமனை வச திகள் இல்லாமை, தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கான வர்த்தக நிலையங்கள் இல்லாமை, அந்த மக்களை மேலும் பின்னடைவை நோக்கி கொண்டு செல்கின்றது.*

*இலங்கை பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவை சந்தித்துள்ள இந்த தருணத் தில், மலையக பகுதிகளில் வாழ்கின்ற இந்திய வம்சாவளித் தமிழர்கள் மாத்திரமன்றி, நாட்டிலுள்ள அனைத்து மக்களும் பாதிக் கப்பட்டுள்ளனர். சமையல் எரிவாயு, எரி பொருள் உள்ளிட்ட பொருட்களுக்கு தட்டுப் பாடு நிலவி வருகின்ற இந்த தருணத்தில், அந்த பொருட்களை கொள்வனவு செய்வதற் காக மக்கள் இன்றும் வரிசைகளில் காத்திருக் கின்றனர்.*

*இவ்வாறான நிலையில், எரிபொருள் கொள்வனவுக்கான இந்தியாவினால் முதல் கட்டமாக 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி எதிர்வரும் ஓரிரு வாரங் களில் கிடைக்கவுள்ள நிலையில், அந்த கடனு தவி கிடைத்ததை அடுத்தே ஓரளவேனும் எரிபொருள் பிரச்சினை தீரும் என்ற நம்பிக் கையுடன் அரசாங்கம் தமது நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றது.*

**பி.பி.சி.**

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மாசி - 16 புதன்கிழமை
பிலவ வருடம் - பங்குனி 02
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : சதுர்த்தசி




**மேடம்**
குடும்பத்தில் பெரியோர்களின் விருப்பத்தை நிறைவேற்றி ஆசி பெறுவீர்கள். முயற்சி ஒன்றில் எதிர்பாராத விதத்தில் வெற்றி கிடைக்கும். பொது வாழ்வில் ஈடுபடுவோருக்கு புகழ், மரியாதை அதிகரிக்கும்.

**இடபம்**
உற்சாகமான நாள். பொறுப்புடன் கடமையில் ஈடுபடுவீர்கள். வீண் அலைச்சல் ஏற்படலாம். தொழி லில் லாபம் காண்பீர்கள். நீண்டநாள் முயற்சி வெற்றி பெறும். மனைவி வழியில் உதவி உண்டு.

**மிதுனம்**
மனதில் தெளிவு பிறக்கும். ஆன்மிகம் மேலோங்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். தொழிலில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். பிறருடைய நம்பிக்கையை பெறுவதற்கு அதிகமாகப் பாடுபடுவீர்கள்.

**கடகம்**
பணியிடத்தில் எதிர்பார்த்திருந்த புதிய பொறுப்பு கிடைக்கும். முயற்சியில் தடைகள் நீங்கும். பிரபலமான மனிதர்களைச் சந்திப்பீர்கள். அனுபவ அறிவால் பிரச்னைக்கு தீர்வு பெறுவீர்கள்.

**சிம்மம்**
நல்ல செய்தி வீடு தேடி வரும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். பலநாள் பிரச்னை ஒன்றைச்சமாளித்து நிம்மதி காண்பீர்கள். உங்கள் நேர்மையான முயற்சிக்கு நல்லவர்கள் உதவுவார்கள்.

**கன்னி**
நல்ல நிகழ்ச்சிகள் வீட்டில் நடைபெறத் தொடங்கும் நாள். அரசாங்கம் சம்பந்தப்பட்ட முயற்சியில் அனுகூலம் உண்டு. பலநாள் திட்டம் நிறைவேறும். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**துலாம்**
அலுவலகத்தில் மதிப்பு கூடும். சாதனையில் ஈடுபடுவீர்கள். உடன் பிறந்தவர்கள் பற்றிய கவலை வேண்டாம். உடல்நிலை திருப்தி தரும். முயற்சியால் முன்னேற்றம் உண்டு. செலவு அதிகமாகும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினரின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள். மகிழ்ச்சி கூடும். எதிர்பார்ப்பு நிறைவேறும். நல்ல முடிவுகள் எடுப்பீர்கள். தடைகளை படிக்கட்டுகளாக மாற்றி செயல்படுவீர்கள்.

**தனுசு**
நேர்மை அதிகரிக்கும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை. யாரிடமும் விவாதம் வேண்டாம். கவலை வந்து நீங்கும். நண்பர்கள் புரிந்து கொள்ளாததால் பிரச்னைகள் வரக் கூடும்.

**மகரம்**
அதிகமாக உழைப்பீர்கள். பணவரவு கூடும். பணவரவு அதிகரிக்கும் நாள். அமைதி கிடைக்கும். புதிய முயற்சிகளில் வேகமான முன்னேற்றம் ஏற்படும்.

**கும்பம்**
நெடுநாள் முயற்சியில் வெற்றி கிடைக்கும். பாராட்டு மழையில் நனைவீர்கள். வழக்கத்தை வருமானத்தை பெருக்குவீர்கள். நண்பருக்குத் தாழ்வு மனப்பான்மை வராமல் பாதுகாப்பீர்கள்.

**மீனம்**
தைரியம் அதிகரிக்கும். உற்சாகமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். விடாமுயற்சியுடன் சாதனை புரிவீர்கள். அதற்கான பணபலன் கிடைக்கும். கடந்த கால உழைப்பின் பயன் கிடைக்கும்.

# மசோதாவை ஜனாதிபதிக்கு அனுப்ப தமிழக ஆளுநர் ஆர்.என் ரவி உறுதி

## முதலமைச்சருடன் நேற்று முக்கிய பேச்சு

சென்னை, மார்ச் 16

நீட் விலக்கு மசோதாவை ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதாக தமிழக முதலமைச்சரிடம் ஆளுநனர் உறுதி அளித்துள்ளார். தமிழக ஆளுநர் ஆர்.என் ரவியை முதலமைச்சர் மு.க ஸ்டாலின் நேற்று சந்தித்துப் பேசினார். நீட் விலக்கு மசோதாவை மீண்டும் நிறைவேற்றி கவர்னருக்கு அனுப்பிய நிலையில், கவர்னரை முதல் அமைச்சர் மு.க ஸ்டாலின் சந்தித்துப் பேசியது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்பட்டது.



சந்திப்பு தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், நீட் விலக்கு மசோதாவை ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதாக முதலமைச்சரிடம் ஆளுநனர் உறுதி அளித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பல மாதங்களாக நிலுவையிலுக்கும் மற்ற சட்ட முன்வடிவுகள் மீதும் நடவடிக்கை எடுக்க கவர்னரிடம் முதல் அமைச்சர் மு.க ஸ்டாலின் வலியுறுத்தி யதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்ட மன்றத்தின் வரலாற்று சிறப்புமிக்கக் கூட்டத்தில், இந்த சட்ட முன் வடிவு மீண்டும் நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதி ஒப்புதலுக் காக ஆளுநருக்கு திருப்பி அனுப்பி வைக்கப் பட்டது. 2021-2022ஆம் கல்வி ஆண்டு முடிவுக்கு வந்து, 2022-2023ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைமுறை விரைவில் தொடங்க உள்ள நிலையில், நீட் தேர்வுக்கு விலக்கு கோரும் சட்டமுன் வடிவை ஜனாதிபதி ஒப்புத லுக்கு விரைந்து அனுப்பிட வேண்டும் என்று தமிழக கவர் னரை தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் நேரில் சந்தித்து வலியுறுத்தினார்.

மேலும், இதே போன்று பல மாதங்களாக நிலுவையில் இருக்கும் சட்டமுன்வடிவுகள் மற்றும் கோப்புகள் மீது உடனடி நடவடிக்கை எடுப்பதன் மூலம், தமிழ்நாடு சட்டமன்றத்தின் மாண்பைக் காப்பதுடன், தமிழக மக்களின் உணர்வுகளை மதிப்பதாகவும் அமைந்திடும் என தமிழக ஆளுநரிடம் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார்.

# தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியை உடனடியாக மாற்றவேண்டும்

## மக்களவையில் தி.மு.க. எம்.பி.க்கள் முழக்கம்

சென்னை, மார்ச் 16

தமிழக ஆளுநர் ஆர்.என். ரவியை உடனடியாக மாற்ற வேண்டும் என்று மக்களவையில் திமுக எம்.பி.க்கள் நேற்று முழக்கமிட்டனர். சட்டப்பேரவையில் நிறை வேற்றப்பட்ட நீட் விலக்கு மசோதாவை அளுநர் ஆர்.என்.ரவி மீண்டும் அரசுக்கே திருப்பி அனுப்பினார்.

இதனால் தமிழக ஆளுநரை நீக்கவேண்டும் என்று தமிழக எம்.பி.க்களும். எம்.எல்.ஏ.க்களும் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த நிலையில், தமிழக கவர்னர் ஆர்.என். ரவியை உடனடியாக மாற்ற வேண்டும் என்று மக்களவையில் தி.மு.க. எம்.பி.க்கள் டி. ஆர் பாலு உள்ளிட்டோர் முழக்கமிட்டனர்.

தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி, சட்டத்தை மதிக்காமல் செயல்படுகிறார் என்றும், நீட் விலக்கு மசோதா உட்பட 7 மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிலுவையில் வைத்துள்ளதாகவும் திமுக எம்.பி., டி.ஆர்.பாலு மக்களவையில் குற்றம் சாட்டினார். அவர் கூட்டாட்சி நடத்துகிறாராஹ என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

# முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி வீட்டில் பொலிஸார் அதிரடி சோதனை

## பழிவாங்கும் நடவடிக்கை என அ.தி.மு.க. கண்டனம்

சென்னை, மார்ச் 16

முன்னாள் அமைச்சர் எஸ். பி.வேலுமணிக்கு சொந்தமான இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் நேற்று அதிரடியாக சோதனை நடத்தினர்.

இந்நிலையில் இது அரசியல் ரீதியாக பழிவாங்கத் துடிக்கும் திமுக என்று அ.தி.மு.க. தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கட்சியின் ஒருங்கிணையாளர் ஓ.பன்னீர் செலவம் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி கூட்டாக அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில், “தனது தோல்விகளை மறைக்க அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீது மீண்டும் பழிவாங்கும் நடவடிக்கைகளை ஏவிவிட்டு வருகிறது திமுக. முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி மீது பொய்க் குற்றச்சாட்டுகளை சுமத்தி, அவர் தொடர்புடைய இடங்களில் லஞ்ச ஒழிப்பு சோதனை என்ற பெயரில் தி.மு.க. அரசு, மீண்டும் அவரை குறி வைத்தும், சிங்காநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே. ஆர். ஜெயராம் உள்ளிட்டோரைக் குறிவைத்தும் பழிவாங்கும் நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டிருக்கிறது. இந்த நடவடிக்கைகள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீனவர்கள் கைது விவகாரத்தில் தி.மு.க. அரசு நாடகமாடுகிறது

## பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை

சென்னை, மார்ச் 16

தமிழக மீனவர்கள் கைது விவகாரத்தில் திமுக அரசு நாடகம் நடத்துவதாக பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை நேற்று குற்றம் சாட்டியுள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, உக்ரைன் மாணவர்கள் மீட்கப்பட்ட விவகாரத்தில் தமிழ்நாடு அரசு பெருமை பேசுவது நியாயமானது இல்லை எனக் குறிப்பிட்டார். மேலும், தமிழ்நாட்டு மீனவர்களை பா.ஜ.க. அரசு பாதுகாப்பதாகவும், மீனவர்கள் விவகாரத்தில் தி.மு.க. அரசு நாடகம் நடத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

## சிறுவையின்றி மகிமையில்லை

*மத் 2717-28*



எம் துயரங்களும் ஏன் இன்பங்களும் ஒரு மனிதனுடைய வாழ்வில் ஒன்றாக கலக்கப்பட்டுள்ளது. இறைவன் மனிதன் மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென்று விரும்புகின்றான் ஆனால் மனிதன் இறைவன் தரும் மகிழ்ச்சியை விட்டு துன்பத்தை தன்னுடையதாக்கி அதில் உழன்ற கொண்டிருக்கின்றான். இன்றைய நற்செய்தியில் இயேசுவின் பாடுகளும் தன் மக்களுக்காக பதவி கேட்ட தாயையும் எடுத்துக்கூறுகின்றது.

ஆனால் இயேசு நமக்கு படிப்பிப்பது என்னவெனில் துயரம் பாடுகளின் வழி தான் வெற்றியும், மகிமையும் அடைய முடியுமென்தாகும்.

துயரமும், வெற்றியும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும் இயேசுவின் வாழ்வு நமக்கு கற்பிப்பது. இதுவே சிலுவையின்றி மகிமையில்லை உயிர்ப்பில்லை.

நமது வாழ்விலும் இதுவே நியதி. துன்பதுயரங்கள் இன்னல்கள், இடைஞ்சல்கள் நம்மை மனம் தளரச் செய்யக்கூடாது. மாறாக துன்பம் தான் நமக்கு நம் இயலாத்தன்மையை மனிதத்தன்மையை உணர்த்தும் கருவி என்பதை உணர்ந்து இறைவனின் உதவியை நாடுவோம்.!

**அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா**

# எங்களை விமர்சித்தவர்கள் இன்று நாட்டை விற்கிறார்கள்

## ருவான் விஜேவர்தன சீற்றம்



**கொழும்பு, மார்ச் 16**

**“நெருக்கடியான சூழ்நிலையில் நாட்டை எப்படி நிர்வகிப்பது என்பது தொடர்பில் ஆட்சியாளர்களுக்கு உரிய அனுபவம் இல்லை. அதனால் தான் பிரச்னைகள் உக்கிரமடைந்துள்ளன.” _ என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரான ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஐக்கிய தேசியக் கட்சி, நாட்டை அமெரிக்காவுக்கு விற்பனை செய்கின்றது என பிரசாரம் முன்னெடுத்தனர். அதுமட்டுமல்ல இனங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தியே இவர்கள் ஆட்சிக்கு வந்தனர்.

ஆனால் இன்று நாட்டு வளங்கள் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது- என்றார். அதேவேளை, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுவருகின்றன என்று ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா குறிப்பிட்டார். (அ)

# ஏப்ரல் மாதத்துக்கு பின்னர் எரிபொருள் விலை குறையும்?

*கொழும்பு, மார்ச் 16*

எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கு பின்னர் சர்வதேச சந்தையில் எரிபொருளின் விலை குறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக கனியவளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்த கனியவள கூட்டுதாபனத்தின் தலைவர், அதன் பலனை மக்களுக்கு பெற்று தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிட்டார்.

இதேவேளை, சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை நேற்று முன்தினம் 5 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

இதற்கமைய ஒரு பீப்பாய் ப்ரெண்ட் ரக எண்ணிக்கையின் விலை 5.77 அமெரிக்க டொலர் வீழ்ச்சியடைந்து 106.90 அமெரிக்க டொலராக பதிவானது. (அ)

# ரஷ்யா-உக்ரைன் யுத்தத்தினால் தேயிலை ஏற்றுமதி இடைநிறுத்தம்

*கொழும்பு, மார்ச் 16*

ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் இடையே போர்மூண்டுள்ள நிலையில், இரு நாடுகளுக்குமான தேயிலை ஏற்றுமதி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து கூடுதலாக தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகளின் வரிசையில் ரஷ்யா மூன்றாம் இடத்தையும், உக்ரைன் 14 ஆவது இடத்தையும் வகிக்கின்றன.

போர் நிலைமையினால் குறித்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கான பணத்தை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும், கப்பல் நிறுவனங்கள் அந்த நாடுகளுக்கு செல்ல தயக்கம் காட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வேறு நாடு ஒன்றின் ஊடாக நிதி கொடுக்கல் வாங்கல்களை செய்ய முயற்சித்தபோதிலும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் பொருளாதாரத் தடைகளினால் இந்த முயற்சியும் தோல்வியடைந்துள்ளது என ஏற்றுமதியாளர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த 2021ஆம் ஆண்டில் ரஷ்யாவிற்கு 27 மில்லியன் கிலோ கிராம் தேயிலையையும், உக்ரைனுக்கு 4 மில்லியன் கிலோ கிராம் தேயிலையையும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. (அ)

# இரண்டு அமைச்சுக்களின் விடயதானங்களில் மாற்றம்

*கொழும்பு, மார்ச் 16*

கைத்தொழில் மற்றும் சுற்றா டல் அமைச்சுக்களின் விடயதா னங்களை மாற்றியமைத்து வர்த் தமானி அறிவித்தலை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.

அதன்படி கைத்தொழில் அமைச்சின் கீழ் 15 நிறுவனங்களும் சுற்றாடல் அமைச்சின் கீழ் 5 நிறுவனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய சுற்றாடல் அமைச்சுடன் இலங்கையின் காலநிலை நிதியம் இணைகிறது.

தற்போது உள்நாட்டின் கனிம வளங்களைப் பயன்படுத்தி நாட்டின் உற்பத்தி செயல்முறையை வலுப்படுத்துவது சுற்றுச்சூழல் அமைச்சின் பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

இந்த செயல்முறை முன்பு கைத்தொழில் அமைச்சின் கீழ் இருந்த நிலையில், இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் அது சுற்றுச்சூழல் அமைச்சுடன் இணைக்கப்படுகிறது. (அ)

# இலங்கையர்களுக்கு அதிக வேலைவாய்ப்பு

## சவூதியிடம் அரசு கோரிக்கை

*கொழும்பு, மார்ச் 16*

சவூதி அரேபிய தொழில் சந்தையில் இலங்கையர்களுக்கு அதிக வேலைவாய்ப்புக்களை எதிர்பார்ப்பதாக இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், சவூதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இளவரசர் பைசல் பின் பர்ஹான் பின் அப்துல்லா அல் சௌத்திடம் நேற்று முன்தினம் கேட்டுக்கொண்டார்.

சவூதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இளவரசர் பைசல் பின் பர்ஹான் பின் அப்துல்லா அல் சௌத் மற்றும் அவரது தூதுக்குழுவினர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்துள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அவர், நேற்று முன்தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரை சந்தித்த பின்னர் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸை வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் சந்தித்தார். இதன்போதே அமைச்சர் இவ்வாறான கோரிக்கையை முன்வைத்தார்.

சவூதி அரேபிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரை வரவேற்ற அமைச்சர் பீரிஸ், இலங்கை - சவூதி அரேபிய இருதரப்பு உறவுகளை முடிவுகள் சார்ந்த, பன்முகக் கூட்டாண்மையாக மாற்றுவதற்கான இலங்கையின் ஆர்வத்தை வெளிப்படுத்தினார்.

தற்போதைய உலகளாவிய சூழலில், பரஸ்பர நலனுக்காக இருதரப்பு ஆர்வமுள்ள பல துறைகளில் வலுவான உறவுக்கு இரு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டனர்.

ஐ.நாவில், குறிப்பாக ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வின்போது, இலங்கைக்கு சவூதி அரேபியா நல்கிய வலுவான ஆதரவையும் அனுதாப அணுகுமுறையையும் அமைச்சர் பீரிஸ் பாராட்டினார்.

கொழும்புத் துறைமுகம், அம்பாந்தோட்டை துறைமுகம், அம்பாந்தோட்டையில் பிரத்தியேகமான மருந்து வலயங்கள், புதிதாக அடையாளம் காணப்பட்ட சர்வதேச தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள், மட்டக்களப்பில் துணி / ஆடை வலயம் ஆகியவற்றில் சவூதி அரேபியாவின் முதலீடுகளை ஊக்குவித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், சவூதி அரேபிய தொழில் சந்தையில் இலங்கையர்களுக்கு அதிகமான வேலை வாய்ப்புக்களை எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அபிவிருத்தி ஒத்துழைப்பு என்பது இருதரப்பு பங்காளித்துவத்தின் முக்கிய அங்கம் எனக் குறிப்பிட்ட அமைச்சர் பீரிஸ், இலங்கைக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி உதவிகளை வழங்கியமைக்காக சவூதி அரேபியாவுக்கு இலங்கையின் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையின்போது, இரு நாடுகளுக்குமிடையே ஏற்கனவே நிலவுகின்ற உற்சாகமான இருதரப்பு உறவுகளை மேலும் ஆழப்படுத்துவதற்கான சவூதி அரேபிய அரசாங்கத்தின் உறுதிப்பாட்டையும், பொருளாதார ஒத்துழைப்பையும் சவூதி அரேபிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மீண்டும் வலியுறுத்தினார். சவூதி அரேபியாவை தற்போதைய எண்ணெய் சார்ந்த நிலையில் இருந்து மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் டிஜிற்றல் பொருளாதாரத்திற்கு மாற்றுவதற்கான வழிமுறையாக, சவூதி அரேபியாவின் 2030 இலக்கை அவர் சுட்டிக் காட்டினார். (அ)

# படுக்கையில் சிறுநீர் கழித்த சிறுவனின் பிறப்புறுப்பில் பெப்பர் ஸ்பிறே தெளிப்பு

## சிறுவர் இல்லத்தில் கொடூர தண்டனை

*கொழும்பு, மார்ச் 16*

திவுலப்பிட்டிய, கடவல பிரதேசத்தில் உள்ள சிறுவர் இல்லத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 9 வயதுச் சிறுவனின் ஆணுறுப்பில் பெப்பர் ஸ்பிறே தெளிக்கப்பட்டதால் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக திவுலப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவன் இரவில் படுக்கையில் சிறுநீர் கழித்தமைக்கு தண்டனையாக சிறுவர் இல்ல விடுதி மேற்பார்வையாளர் இந்த தண்டனை வழங்கியமை தெரிய வந்தது.

பாதிக்கப்பட்ட சிறுவன் பற்றிய தகவல்களை பொலிஸார் நேற்று முன் தினம் நீதிமன்றத்திற்கு அறிவித்தனர்.

சிறுவனை குளியலறைக்கு அழைத்துச் சென்ற விடுதி மேற்பார்வையாளர், ஆடைகளை களைந்து, சிறுவனின் ஆணுறுப்பில் பெப்பர் ஸ்பிறே தெளித்துள்ளார். அந்த இல்லத்தில் சுமார் 25 சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். சிறுவர் இல்லத்தில் உள்ள சிறுவர்களை மேற்பார்வையாளர் துஷ்பிரயோகம் செய்து துன்புறுத்துவதாக தகவல் கிடைத்துள்ளதால் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக திவுலப்பிட்டிய பொலிஸார் கூறினர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் மற்றும் சிறுவர் இல்லத்தில் வசிக்கும் சிறுவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்யுமாறு திவுலப்பிட்டிய பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதுடன், ஏதேனும் தவறுகள் இடம்பெற்றிருந்தால், சிறுவர் இல்ல காப்பாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# சூழ்ச்சிமூலம் பிரதமராவது ரணிலுக்கு கைவந்த கலை

## பதறுகிறார் காமினி லொக்குகே

**கொழும்பு, மார்ச் 16**

**"சூழ்ச்சி நடவடிக்கைமூலம் பிரதமர் பதவிக்கு வருவது ரணிலுக்கு கைவந்த கலை. எனினும், அவருக்கு நாம் பிரதமர் பதவியை வழங்கமாட்டோம்." _ என்று வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது, தேசிய அரசு அமைக்கப்பட்டு, பிரதமர் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படவுள்ளார்." என வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- எவராவது ரணிலின் ஜோதி டத்தை பார்த்திருப்பார்கள் போலும். அவரை பிரதமர் ஆக்க நாம் தயார் இல்லை. எப்போதுமே அவர் குறுக்கு வழியில்தான் அந்த பதவிக்கு வந்துள்ளார்- என்றார்.

அத்துடன், தற்போதைய சூழ்நிலையில் மீண்டும் ஒருமுறை எரிபொருள் விலை



அதிகரிக்கப்படமாட்டாது என்ற உறுதிமொழியையும் அவர் வழங்கினார். (அ)

# முள்ளியவளை சிறுவர் இல்லத்தின் இரு சிறுமிகள் தற்கொலை முயற்சி

## 5 சிறுமிகள் தப்பியோட்டம்

முல்லைத்தீவு, மார்ச் 16

முல்லைத்தீவு முள்ளியவளை பகுதியில் அமைந்துள்ள பாரதி சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்து கல்வி கற்றுவரும் இரண்டு சிறுமிகள் அலரி விதையை உட்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் தற்போது முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். நேற்று முன்தினம் இந்த சம்பவம் நடந்தது.

சிறுவர் இல்லத்தை சேர்ந்த 13, 14 வயதான இரண்டு சிறுமிகள் நேற்று முன்தினம் பாடசாலை சென்றனர். பாடசாலையில் வைத்தே அலரி விதையை உட்கொண்டனர்.

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் அவர்கள் கல்வி கற்கிறார்கள்.

பொலிஸார் நடத்திய விசாரணையில், சிறுவர் இல்லத்தில் வசிக்கக்கூடிய நிலைமை யில்லையென சிறுமிகள் தெரிவித்ததாக கூறப்படுகிறது. தம்மை நிர்வாகத்தினர் சரமாரியாக திட்டுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதை பொறுக்க முடியாமலேயே அவர்கள் அலரி விதை உட்கொண்டதாக தெரிவித்துள்ளனர். இதேவேளை, கடந்த வார மும் இந்த சிறுவர் இல்லத்திலிருந்து 5 சிறுமிகள் தப்பியோடியுள்ளனர்.

இந்த அதிர்ச்சிச் சம்பவங்களையடுத்து முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் பிரமுகரான கே.பி என்ற குமரன் பத்மநாதனின் கண்காணிப்பில் இந்த இல்லம் இயங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# கோட்டாபயவை தெரிவு செய்தபோது மகிழ்ந்தோம் இப்போது வருந்துகிறோம்


## 69 இலட்சம் பேரும் இந்த அரசை மாற்ற உழைக்க வேண்டும் என்கிறார் ஆனந்ததேரர்

கொழும்பு, மார்ச் 16

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டபோது மக்கள் எவ்வாறு மிகவும் மகிழ்ச்சியடைந்தனரோ, அதே மக்கள் தற்போது வருந்துகின்றனர் என முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தேரர் தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு பாடுபட்ட ஆனந்த தேரர், தற்போதைய நிர்வாகத்தை கவிழ்க்கும் முயற்சியில் மகா சங்கத்தினருடன் கைகோர்க்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்கம் தொடர்ச்சியாக தவறான தீர்மானங்களை எடுத்து வருவது பொதுமக்களுக்கு சுமையை ஏற்படுத்தும் என தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.



அரசாங்க அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது தவறுகளை திருத்திக் கொள்வதில் ஆர்வம் காட்டுவதில்லை எனவும் தேரர் குறிப்பிட்டார்.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தனது தீர்மானங்களினால் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக அரசியலில் இருந்து சிறிது காலம் ஒதுங்குமாறும் ஆனந்த தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டபோது மக்கள் எவ்வாறு மிகவும் மகிழ்ச்சியடைந்தனரோ, அதே மக்கள் தற்போது வருந்துவதாக தேரர் குறிப்பிட்டார்.

பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாக ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு வாக்களித்த 6.9 மில்லியன் வாக்காளர்கள் நாட்டின் தற்போதைய நிலைமையை சிந்தித்து அரசாங்கத்தை கவிழ்க்க ஒன்று திரளவேண்டும் அல்லது அதனை மீண்டும் சரியான பாதைக்கு கொண்டு வர வேண்டும் எனவும் ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார். (அ)

# 2023 இல் கல்வி நடவடிக்கை பாதிக்கப்படும் அபாயநிலை!

கொழும்பு, மார்ச் 16

அடுத்த வருடம் முதல் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அரச அச்சக ஊழியர்கள் சங்கத்தின் ஆலோசகர் எம்.டி.ஆர். அத்துல தெரிவித்தார்.

கடதாசி தட்டுப்பாடு காரணமாக அரச அச்சகத் திணைக்களத்தின் நடவடிக்கைகள் முடங்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக அவர் கூறினார்.

அடுத்த வருடத்துக்கான பாடசாலை புத்தகங்களை அச்சிடுவதற்கு தேவையான கடதாசி இல்லாமையினால், மாணவர்களில் கல்வி நடவடிக்கைகள் முழுமையாக பாதிக்கப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த வருடம் பாடசாலை புத்தகங்களை அச்சிடுவதற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு தொன் கடதாசியின் விலை 165,000 ரூபாவாக காணப்பட்டதோடு, தற்போது அந்த தொகை இரு மடங்காக அதிகரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# நாணய நிதிய உதவி பெற அமைச்சரவை இணக்கம்!

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் சங்யொங் ரீ தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இவ்வாறு இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உணவுப்பொருட்களின் விலை 30 முதல் 40 வீதத்தால் உயர்வு!

கொழும்பு, மார்ச் 16

பல்வேறு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் 30 முதல் 40 வீதத்தினால் உயர்வடைந்துள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவி வரும் டொலர் பிரச்னையினால் இவ்வாறு விலைகள் உயர்வடைந்துள்ளதாக ஒன்றியத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரட்ன தெரிவித்தார்.

கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் பல்வேறு பொருட்களின் விலைகள் உயர்வடைந்துள்ளன.

அத்துடன் நேற்று முன்தினம் முதல் பஸ் கட்டணங்களும் உயர்த்தப்பட்டுள்ளன.

ஏற்கனவே கோவிட் தொற்று காரணமாக அமுல்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தல் ஊடரங்கு மற்றும் சில நடைமுறைகள் காரணமாக இலங்கையில் மக்கள் பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார ரீதியான சரிவு நிலை காரணமாக பொருட்களின் விலைகள் அதிலும் குறிப்பாக அத்தியாவசிய பொருட்களின் விலைகள் பாரியளவில் உயர்ந்துள்ளன. ஏற்கனவே நெருக்கடி நிலையில் இருந்து வந்த நாட்டு மக்களுக்கு இந்த விலை உயர்வு மிகப்பெரும் அடியாக இருப்பதாக சமூக அவதானிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு திறந்த பொருளாதாரமே காரணம்

## கூறுகின்றார் திலும் அமுனுகம

கொழும்பு, மார்ச் 16

நாட்டின் கடந்த கால அரசாங்கங்கள் திறந்த பொருளாதார கொள்கை ஊடாக அரச நிறுவனங்களை விற்பனை செய்து, அனைத்தையும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் நிலைமைக்கு நாட்டை தள்ளியதன் பிரதிபனை தற்போதைய அரசாங்கம் அனுபவிக்க நேரிட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொழும்பு நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இவை அனைத்தையும் அரசு என்ற வகையில் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இல்லை என்று எமக்கு கூற முடியாது. மோசமான நிலைமையை மிகவும் சிறந்த நிலைமையான முகாமைத்துவம் செய்வது தொடர்பான பொறுப்பு அரசாங்கத்திற்குரியது. அரச நிறுவனங்களை தனியார் துறையினருக்கு விற்பனை செய்து, திறந்த பொருளாதாரம் என்று கூறி கதவுகளை திறந்து, நாங்கள் கடதாசியில் சொருகும் ஊக்குகளை கூட இறக்குமதி செய்யும் நிலைமை நாட்டை மாற்றியது யார் என்ற விடயத்தை நாம் சிந்தித்து



பார்க்க வேண்டும்.

அது ஒரு அரசாங்கமாக இல்லாமல் இருக்கலாம். சில அரசாங்கங்களாகவும் இருக்கலாம்.இவற்றுக்கு அடிப்படை காரணமாக இருந்தவர்கள் யார் என்று பார்த்தால், தற்போது கோஷம் போட்டுக்கொண்டிருப்போரின் தந்தைகள், பாட்டன்மார்கள்.

இவர்களே திறந்த பொருளாதார கொள்கையை ஆரம்பித்து வைத்தனர். அதன் பிரதிபனை நாம் அனுபவிக்க நேரிட்டுள்ளது-என்றார். (அ)

# எந்த மருந்துகளுக்கும் தட்டுப்பாடு இல்லை!

## இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண

கொழும்பு, மார்ச் 16

**நாட்டில் எந்த வகை மருந்துகளுக்கும் தற்போது தட்டுப்பாடு இல்லை என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.**

அரசியல் இலாபங்களுக்காக நாட்டில் மருந்து பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக ஊடகங்கள் ஊடாக பல்வேறு பொய்யான அறிக்கைகள் வெளியிடப்படுவதாக தெரிவித்த அவர், தற்போதைக்கு நாட்டில் எந்த வகை மருந்துகளுக்கும் தட்டுப்பாடு இல்லை என கூறினார்.

இரத்மலானையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண இதனைத் தெரிவித்தார். (அ)



# மைத்திரியை விமர்சித்தவர்கள் இன்று அவரை கேட்கின்றனர்!

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 16

"நாட்டு மக்கள் தற்போது தான் எமது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முக்கியத்துவத்தை உணர ஆரம்பித்துள்ளனர்." - என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை 1991 இல் இந்தியாவில் ஏற்பட்டது. அப்போது நிதி அமைச்சராக மன்மோகன் சிங் இருந்தார். அவர் பொருளாதார விஞ்ஞானத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். நெருக்கடி நிலைமையை சரிவர சமாளித்தார்.

ஆனால் எமது நாட்டில் பொருளாதார விஞ்ஞானம் தெரிந்தவர்களிடம் நிதி அமைச்சு கையளிக்கப்படவில்லை. அந்த அமைச்சு பதவி ஜனாதிபதி வசமே இருந்தது. நாட்டின் தற்போதைய நிலைமைக்கு இதுவும் ஓர் காரணமாகும். எமது கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தபோது அவரை எல்லோரும் திட்டினர். விமர்சித்தனர். ஆனால் இன்று அவரின் முக்கியத்துவத்தை உணர ஆரம்பித்துள்ளனர்-என்றார். (அ)

# அமெரிக்க டொலர் 275 ரூபா!

கொழும்பு, மார்ச் 16

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 275 ரூபாயாக அதிகரித்துள்ளது.

இதேவேளை ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் விற்பனை விலை 360 ரூபா என மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ)

# டீசல் இறக்குமதிக்கு நீண்டகால ஒப்பந்தம்

## அனுமதியளித்தது அமைச்சரவை

கொழும்பு, மார்ச் 16

டீசல் இறக்குமதிக்கான நீண்டகால ஒப்பந்தத்தை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியது. 2022 மார்ச் 03 முதல் 2022 ஒக்ரோபர் 31 வரையிலான 08 மாத காலத்துக்கு டீசல் இறக்குமதிக்கான நீண்ட கால ஒப்பந்தத்தை (அதிகபட்ச சல்பர் சதவீதம் 0.05) வழங்க பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களுக்கு ஏலத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. குறித்த பெறுகை கோரலை எனர்ஜி நிறுவனத்திற்கு வழங்குவதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட நிரந்தரப் பெறுகைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

இதன்படி, வலுசக்தி அமைச்சரினால் கொள்முதலை வழங்குவதற்கு முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (அ)

# அன்னதானம் பெறச் சென்ற பிக்கு யானை தாக்கி மரணம்

கொழும்பு, மார்ச் 16

வீடுகளில் அன்னதானம் பெறச்சென்ற பிக்கு ஒருவர் யானை தாக்கி மரணமான சம்பவம் ஒன்று பலாங்கொடை-முல்கமமடு-கஸ்தலாவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தினமும் காலை நேரத்தில் கிராமத்தில் அன்னதானம் பெறச்செல்லும் இக்கிராம விகாரையின் பிக்குவான கடந்த ஞாயிறு வழமைபோல் அன்னதானம் பெறச்சென்ற போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

54 வயதான இப்பிக்குவின் சடலத்தை 12 மணித்தியாலத்தின் பின்னரே மீட்டதாகவும் இதற்கு முன் இந்த யானை மேலும் 5 பேரை கொலை செய்துள்ளதாகவும் பொலிஸார் நடத்திய விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை, இந்தக் காட்டு யானையை கிராமத்தில் இருந்து விரட்ட அவ்விடத்துக்கு அதிகாரிகள் வருகை தந்ததும் பிரதேச மக்கள் அவர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

முன்னதாக இந்த கிராமத்தைச் சுற்றி மின்சார வேலி அமைப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது அதற்கு வனப்பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவித்ததால் அது தடைப்பட்டதாகவும் இதனால் கிராமத்தில் அடிக்கடி யானைத் தாக்குதலால் மரணங்கள் ஏற்பட்டு வருவதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர். (அ)

# அடுத்த மாத ஆரம்பத்திலிருந்து பால் மா தட்டுப்பாட்டுக்கு தீர்வு!

கொழும்பு, மார்ச் 16

உள்நாட்டு சந்தையில் நிலவும் பால் மா தட்டுப்பாட்டுக்கு தீர்வாக அடுத்த மாத ஆரம்ப பகுதியிலிருந்து குறையின்றி நாடு முழுவதிலும் ஹைலண்ட் பால் மாவைப் பகிர்ந்தளிக்க மில்கோ நிறுவனம் தயார் நிலையில் இருப்பதாக, இராஜாங்க அமைச்சர் ரி.பி.ஹேரத் தெரிவித்தார்.



கடந்த காலத்தில் திரவப் பால் உற்பத்திக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டதால் சந்தையில் பால் மாவிற்கு தட்டுப்பாடு நிலவியது.

அடுத்த மாதம் முதல் திரவப் பாலையும் பால் மாவையும் சந்தைக்கு விநியோகிக்குமாறு தான் மில்கோ நிறுவனத்தின் தலைவர் ரேனுக பெரேராவுக்கு பணிப்புரை வழங்கியிருப்பதாக இராஜாங்க அமைச்சர் ரி. பி.ஹேரத் மேலும் கூறினார். (அ)

# ரயில் கட்டணத்திலும் மாற்றம்!

கொழும்பு, மார்ச் 16

ரயில் பயணக் கட்டணத்தை விரைவில் சீரமைக்கவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக பேருந்து கட்டணம், முச்சக்கர வண்டி கட்டணம் என்பன அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நியூ டயமன்ட் கப்பல் நிறுவனத்திடம் இருந்து 3,480 மில்லியன் பணத்தை பெற நடவடிக்கை!

கொழும்பு, மார்ச் 16

அம்பாறை சங்கமன்கண்டி கடற்பிராந்தியத்தில் பயணித்துக் கொண்டிருந்த போது அனர்த்தத்திற்கு உள்ளான நியூ டயமன்ட் கப்பலிடம் இருந்து இதுவரையில் வழங்கப்படாத 3 ஆயிரத்து 480 மில்லியன் ரூபாவை விரைவில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோப் எனப்படும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு அறிவுறுத்தியுள்ளது.

கடற்சூழல் பாதுகாப்பு அதிகார சபைக்கு இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

2020 செப்ரெம்பர் மாதம் நாட்டின் தென்கிழக்கு கடலில் குறித்த கப்பல் அனர்த்தத்திற்கு உள்ளானது.

இந்த விடயம் தொடர்பில் 12 மில்லியன் ரூபா அறவிடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும் கடற்சூழல் மாசடைதலை தடுக்கும் சட்டத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட 3 ஆயிரத்து 480 மில்லியன் ரூபா இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை என்பது தெரியவந்துள்ளது.

கப்பலில் ஏற்பட்ட தீப்பரவலை கட்டுப்படுத்துவதற்கும் இரசாயன பதார்த்தத்தை தெளிப்பதற்கும் மாத்திரம் 51.3 மில்லியன் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்தநிலையில் சட்டமா அதிபருடன் இணைந்து தாமதமடைந்துள்ள நாட்டுக்கு கிடைக்கவேண்டிய தொகையை விரைவில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோப் குழு வலியுறுத்தியதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# கல்லாறு காட்டுப் பகுதியில் கசிப்பு நிலையம் முற்றுகை!

கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.



தர்மபுரம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, 15 பரல் கோடா, 65 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதுடன் சந் தேக நபரும் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டார். கைது செய்யப் பட்ட சந்தேக நபர் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ)

# வட இலங்கையில் கற்பித்தல்:
# கல்வி தரப்படுத்தலும் சமத்துவமின்மையும்

**கல்விச் சீர்திருத்தங்கள் பலவும் உயர் கல்வியின் அதிகாரத்துவத் தளர்வுகளை நிவர்த்தி செய்வதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. இவ்வாறு கல்வியைத் தரப்படுத்துவது சமூக-பொருளாதார சமத்துவமின்மையையோ எமது கல்வி முறையிலுள்ள பிரச்னைகளையோ கருத்தில் கொள்கின்றதா?**

**எரந்திக்கா டி சில்வா**



கல்விக்கான வாய்ப்பைப் பொறுத்த வரையில் இலங்கையின் முக்கிய மக்கட் தொகை மையங்களுக்கும் அதன் புறத்தே இருப்பவர்களுக்கும் சமனற்ற தன்மையே காணப்படுகின்றது. இங்கு கல்வியின் தரத்திலுள்ள வேறுபாடுகள் பற்றி அதிகம் பேசப்படுவதுண்டு. எனினும் கல்வி வாய்ப்பிலுள்ள வேறுபாடுகள் பற்றிய கலந்துரையாடல்கள் அரிதானவை. பாடத்திட்டங்களை மறுசீரமைத்துக் கல்வியைத் தரப்படுவது மாத்திரம் இச் சமத்துவமின்மைக்குத் தீர்வாக அமையுமா? வட இலங்கையில் திரட்டிய சில அனுபவங்களூடாக "புறப்பகுதிகளில்" கல்வியின் தரப்படுத்தல் பற்றிக் கலந்துரையாடுகின்றது இக் கட்டுரை.

### தரங்களை வகுத்தல்

ஒவ்வொரு மாணவனும் சமத்துவமான முறையில் பள்ளிக்கூட அல்லது பல்கலைக்கழகக் கல்வியை ஆரம்பிப்பதில்லை எனும் போது எவ்வாறு தரத்தினை வகுப்பதென்ற கேள்வி எழுகின்றது. ஒவ்வொரு நகரத்திற்கும் கூட ஒரு மையமும் புறப்பகுதிகளும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. வலய மட்ட ஆங்கில தினப் போட்டியொன்றில் நடுவராகக் கலந்து கொண்ட போது யாழ்ப்பாணத்தில் காணப்படும் சமத்துவமின்மையைக் கண்கூடாகக் கண்டு கொண்டேன்.

யாழ்ப்பாணத்தில் வளங்கள் கொண்ட, வசதியான கிறிஸ்தவப் பாடசாலை ஒன்று சிறப்பான நாடகத்தை முன்வைத்திருந்தது. அவர்களது இம் முயற்சி அறிவுசார் நபர்கள்/பெற்றோர்கள் என்ற மூலதனத்தை அவர்கள் கொண்டிருப்பதைப் பிரதிபலித்தது. 1950 களின் காணிப்பிரச்சினையை அவர்களது நாடகம் கருப்பொருளாகக் கொண்டிருந்தது. மாறாக மற்றைய பாடசாலைகளின் கதைகள் பள்ளி மாணவர்களால் இயற்றப்பட்ட நாளாந்த வாழ்க்கைக் கதைகளாகவும், குறைந்தளவு மேடையமைப்பு வசதிகளைக் கொண்டவையாகவும் காணப்பட்டன. இவ்வாறு சமத்துவமற்ற ஒரு மேடையில் ஏற்றப்பட்ட இந் நாடகங்களுக்கு எதனடிப்படையில் புள்ளிகள் வழங்குவது என்ற உள்ளக்குமுறல் ஒரு புறம். ஆகவே மறுபடியும் தரத்தினை எங்கு வகுப்பது என்ற கேள்வியே தோன்றுகின்றது. இயல்பாகவே வளங்கள் மிக்க "மையங்கள்" தரத்தினை வகுத்துவிடுகின்றன அல்லவா? இவ்வாறான தரம் சமத்துவமானதா?

### வகுப்பறையில் டெய்லரின் கோட்பாடு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்படுத்தும் பாடத்திட்டத் திருத்தங்களின் மத்தியில் பல கல்வி முறை சார் பிரச்னைகளை புறப்பகுதிகள் நோக்குகின்றன. கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் தர உத்தரவாதப் பொறிமுறைகளூடாக விஞ்ஞானம் மற்றும் நிர்வாகம் சார் முறைகளால் இத் திருத்தங்கள் அணுகப்படுவதோடு இவை நன்கொடை நிதியில் தங்கிக் காணப்படுகின்றன. கைத்தொழிலுக்காக ஃபெரெட்ரிக் டெய்லர் முன்வைத்த "விஞ்ஞான முறையிலான நிர்வாகம்" என்ற கோட்பாடு கல்வித் துறைக்கும் நீட்டிக்கப்படுவது தெளிவாகின்றது.

இருபதாம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவில் டெய்லரின் "விஞ்ஞான முறையிலான நிர்வாகம்", ஊழியத்தை தரப்படுத்தல், பொறிமுறையாக்கல், மற்றும் உருப்படியாக்கல் மூலம் வேலைத்தளத்தின் வினைத்திறனைப் பன்மடங்கு அதிகரித்திருந்தது. டெய்லரின் இம்முறையானது வியாபாரம் மற்றும் கைத்தொழில் துறைகளாலும் பயன்படுத்தப்பட்டதோடு கல்வி மற்றும் ஏனைய துறைகளிலும் வெகு துரிதமாக ஊடுருவியது. பல்கலைக்கழகங்களுக்கும் கண்கணிப்பு, தரப்படுத்தப்பட்ட பரிசீலனைகள், நிறுவனம் சார் அதிகாரம் மற்றும் கட்டுப்பாடு போன்றவை ஏற்படுத்தப்பட்டதோடு கல்வி நடவடிக்கைகளை மதிப்பிட "வினைத்திறன் வல்லுனர்கள்" அமர்த்தப்படுகின்றனர்.

இவற்றினூடாக எமது கல்வியும் முதலாளித்துவப் பொருளாதாரத்துக்கு ஏற்ற உற்பத்தி வரிசையாக மாறிவிடுகின்றது. கல்வியின் வினைத்திறனை மதிப்பிட அளவிடக்கூடிய அளவைகள் கையாளப்படுவதோடு இவை பட்டதாரிகள் எவ்வளவு தூரம் வேலைக்கமர்த்தப் படக் கூடியவர்கள் என்பதையே மையமாகக் கொண்டுள்ளன. "வேலைக்கமர்த்தக்கூடிய தன்மையின்" அடிப்படையிலேயே மக்களின் வரிப்பணமும் வெவ்வேறு துறைகள் மத்தியில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. தேசிய அறிக்கைகளிலும் கூட இவ்வளவைகள் பயன்படுத்தப்படுவதோடு கலைப்பட்டதாரிகளை வேலைக்கமர்த்த முடிவதில்லை என்பதன் அடிப்படையில் கலைப் பிரிவுக் கல்வியை இவை புறந்தள்ளுகின்றன.

இவ்வாறான அளவைகள் மாணவர்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். கலை மற்றும் மனித நேயப் பீடங்களின் பாடத்திட்டங்கள் செயற்கையான, மாணவர்களால் அடையக் கடினமான அதீத இலக்குகளை உள்ளடக்கிய தரங்களைக் கொண்டுள்ளன. கல்வி வெளிப்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட அதிகார ரீதியான இந்த முறைகளை அணுகுவதற்கே குறிப்பிடத்தக்களவு முன்னாயத்தம் தேவைப்படுகின்றது. கற்கை நெறிகளுக்குரிய முன்கூட்டிய தேவைகளை வகுத்து அவற்றை அடைவதற்கு மாணவர்களுக்குப் போதிய நேரம் வழங்கப்பட வேண்டும்.

### சமத்துவத்தினடிப்படையில் விதிமுறைகளை மாற்றல்

கல்வியைப் பேணுபவர்களாகப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் காணப்படும்போதும் சமத்துவத்தினைக் கருத்தில் கொண்டு சில இடங்களில் விதிமுறைகளை அவர்கள் மாற்றியமைக்கின்றனர். உதாரணமாக யாழ.பல்கலைக்கழகத்தில் கற்பித்த எனது குறுகிய அனுபவமானது சில மாணவர்களைப் பொறுத்த வரையில் விரிவுரைகளுக்கான வருகை, காலக்கெடுவைகள், மதிப்பீடுகள் போன்றவற்றில் நான் தளர்வாக நடந்து கொள்ள வேண்டிய தேவையை உணர்த்தியது. பட்டப்படிப்பின் இரண்டாம் ஆண்டிலுள்ள மாணவர்கள் முறையான குறிப்பிடல் முறைகள் பற்றியோ, கல்விசார் முறையற்ற நடத்தைகள் பற்றியோ அறிந்திருக்கவில்லை என நான் கண்டுகொண்டேன். இங்கு கல்வியாளர்களாக நாம் எதிர்கொள்ளும் சிக்கலானது கல்விசார் விதிமுறைகளைப் பேணாதிருப்பதற்கு அவர்களைத் தண்டிப்பதா அல்லது அதற்குரிய காரணங்களைக் கண்டறிவதா என்பதாகும்.

அதிகாரத்துவமான எமது அமைப்பு முறையில் எவ்வளவு தூரம் இப் பிரச்னைகளை நாம் கையாள முடியுமென்பது கேள்விக்குறியானது. கற்பித்தல், மதிப்பிடல், ஆய்வு, நிர்வாகம் என்ற வேலைப் பழுவின் மத்தியில் எத்தனை ஆசிரியர்களுக்குப் பல்வேறுபட்ட பின்னணிகளிலிருந்தும் வரும் மாணவர்களிடையிலான சமத்துவமின்மையை நிவர்த்திப்பதற்கான சந்தர்ப்பம் அமைகின்றது?

உயர் கல்வியின் நிர்வாகிகள் கல்வி முறைகளைப் பொறுத்த வரையில் "விஞ்ஞான முறை" சார் அணுகுமுறையைப் பின்பற்றுகின்றனர்.

முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட தரங்களையும் இலக்குகளையும் அடையும் நோக்கில் வெளிப்பாடுகளையும் செயல் திறனையும் அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு முறைகளின் பால் உயர் கல்வி ஈர்க்கப்படுகின்றது. இவ்வாறு வெளிப்படுகளை ஒத்திசைக்கச் செய்வதன் மூலம் குறிக்கோளான இலக்குகளை அடையக்கூடிய பட்டதாரிகளை உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு மாணவர்களின் ஆக்கத்திறன்களும், வித்தியாசங்களும், திறமைகளும் புறக்கணிக்கப்படுகின்றமை கவலைக்குரியது.

கல்விச் சீர்திருத்தங்கள் பலவும் உயர் கல்வியின் அதிகாரத்துவத் தளர்வுகளை நிவர்த்தி செய்வதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. இவ்வாறு கல்வியைத் தரப்படுத்துவது சமூக-பொருளாதார சமத்துவமின்மையையோ எமது கல்வி முறையிலுள்ள பிரச்னைகளையோ கருத்தில் கொள்கின்றதா? முதன்மை மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சமத்துவமின்மையை நிவர்த்திக்க முன் கல்வியைத் தரப்படுத்துவது நியாயமானதா? தரமான அடிப்படைக் கல்விக்கான வாய்ப்பை வழங்காது உயர் கல்வியைத் தரப்படுத்துவது டுபோய்ஸ் குறிப்பிட்டவாறு புறப்பகுதிகள் தொடர்ந்தும் "வெள்ளை மனிதனின் மர்மமான எழுத்துக்களை" அறியப் போராடும் "கேனானுக்கான மலைப்பாதைக்குச்" சமானமாகிவிடுகின்றது.

"இது ஒரு களைப்பூட்டும் கடினமான செயலாகும். ஆங்காங்கு அங்குலமாக உண்டாகிய முன்னேற்றங்களையும், பாதையினின்றும் நழுவியவர்களையும், வீழ்ந்தவர்களையும் உணர்ச்சியின்றிக் குறிப்பெடுக்கின்றார் புள்ளிவிபரவியலாளர். களைத்துச் சோர்ந்த யாத்திரிகளுக்கு மலையுச்சி இருண்டே காணப்பட்டது, பனி மூட்டம் குளிர்ந்தது, கேனான் அடைய முடியாத் தூரத்திலேயே காணப்பட்டது"- W.E.B Lபோய்ஸ் (W.E.B DuBois)

**எழுத்தாளர்:**
**யாழ்.பல்கலைக்கழகத்தின் மொழியியல் மற்றும் ஆங்கிலத் துறையைச் சார்ந்தவர்.**

**மொழிபெயர்ப்பு: கோபிகா சிவகுமார்**

# தெற்காசிய நாடுகள் உக்ரைன் போரை எப்படி பார்க்கின்றன?



**நிருபமா சுப்பிரமணியம்**

தங்கள் நாட்டின் வரலாறு, பொருளாதாரம், அதிகாரத்திற்காக சண்டையிடும் போட்டியாளர்கள், உலக நாடுகளுடன் கொண்டிருக்கும் உறவுகளை அடிப்படையாக கொண்டு இந்தியாவின் அண்டை தெற்காசியா நாடுகள் தற்போது நடைபெற்று வரும் ரஷ்ய - உக்ரைன் போரில் தங்களின் நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். இந்த ஏழு நாடுகளில், ரஷ்யாவுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் மற்றும் நடுநிலைமையை கடைப்பிடித்தவர்களுக்கு மத்தியில் ஒரு தெளிவான பிளவு இருக்கிறது.

ஆப்கானிஸ்தான், பூட்டான், மாலைதீவுகள், நேபாளம் ஆகிய நாடுகள் ஐ.நா. பொதுசபையில் ரஷ்யாவுக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவு அளித்தது. வங்கதேசம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் வாக்களிக்கவில்லை. ஐ.நா. மனித உரிமை குழுவின் உறுப்பினராக இருக்கும் நேபாளம், உக்ரைனில் மனித உரிமைகளை மீறும் ரஷ்யா மீது சுதந்திரமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற மனித உரிமை குழுவின் தீர்மானத்திற்கும் ஆதரவாக வாக்களித்துள்ளது.

### இலங்கை சுற்றுலாவும் தேயிலையும்

இலங்கையின் சுற்றுலாத்துறை புத்துயிர் பெற்று வருகின்ற நிலையில் பொருளாதார நெருக்கடி இந்த ஆண்டு சரி செய்யப்பட்டுவிடும் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் உக்ரைன் நெருக்கடி அதனை கேள்விக் குறியாக்கியுள்ளது. அந்நிய செலாவணி பற்றாக்குறை இலங்கையின் இறக்குமதி சார்ந்த பொருளாதாரத்தை கடுமையாக பாதித்துள்ளது. ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகள் காரணமாக எண்ணெய் விலையில் ஏற்பட்டுள்ள உயர்வு, எரிபொருள் கொள்முதலுக்காக இலங்கைக்கு இந்தியா வழங்கிய 500 மில்லியன் டொலர் நிதி தற்போது போதுமானதாக இல்லை.

ஏற்கனவே 2019 ஈஸ்டர் வெடிகுண்டு தாக்குதல் மற்றும் 2020 கொரோனா பெருந்தொற்றால் அடிபட்டு கொஞ்சம் கொஞ்சமாக புத்துயிர் பெற்று வரும் இலங்கையின் சுற்றுலாத்துறையும் மேலும் ஒரு முறை அடிவாங்க துவங்கும். ஏன் என்றால் ரஷ்யாவும் உக்ரையினும் இலங்கையின் சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றிய நாடுகள்.

இலங்கையின் தேயிலை அதிக அளவு ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போது விதிக்கப்பட்டிருக்கும் சர்வதேச தடைகளை கொழும்பு ஓரளவுக்கு சமாளித்தால் மட்டுமே இலங்கையின் தேயிலை ரஷ்யாவில் விற்பனை செய்யப்படும்.

இந்த காரணங்களால் தான் இலங்கை ரஷ்யாவுக்கு எதிராக தீர்மானத்தில் வாக்களிக்கவில்லை என்றாலும், கொழும்புவின் நடுநிலைத் தன்மையை பலரும் கேள்விக்குள்ளாக்கியுள்ளனர். வங்கதேச விடுதலைக்கு வழிவகை செய்த 1971ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் போரில் இலங்கை பாகிஸ்தானுக்கு ஆதரவாக இருந்தது மட்டுமின்றி பாகிஸ்தான் விமானப்படை விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் வசதிகளையும் இலங்கை கொடுத்து உதவியது. இந்த சூழலை தற்போது இலங்கையின் சார்புநிலையோடு ஒப்பிட்டும் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகிறது.

“பாகிஸ்தானின் பிராந்திய ஒருமைப்பாட்டை மீறும் உரிமை இந்தியாவுக்கு இல்லை. 1971ஆம் ஆண்டு இலங்கை எடுத்த இந்த நிலைப்பாட்டிற்கு பின்னால் வலிமையான சுயநலம் இருந்தது என்று தான் கூற வேண்டும். இலங்கையின் இருத்தல் தொடர்பான பிரச்சனைகள் இந்தியாவிடம் இருந்து வரலாம் என்று அது கணித்தது. இலங்கையின் சிறுபான்மையினருக்கான இந்தியாவின் ஆதரவையும் இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டையும் மீறுவதை ஆதரிக்கும் எந்த முன்னுதாரணத்தையும் உருவாக்க முடியாது” என்று ரொஹான் சமரஜீவ கொழும்பு டெலிகிராப்பில் கூறினார்.

### பாகிஸ்தானின் நிலைப்பாடு

ஐ.நா. பொதுசபையின் தீர்மானத்திற்கு எதிராக பாகிஸ்தான் வாக்களிக்க மறுத்துவிட்டது. வாக்களிப்பிற்கு முன்னால் அந்நாட்டுக்கு வழங்கப்பட்ட பேசுவதற்கான நேரத்தையும் கடந்துவிட்ட சூழலில் வாக்களிக்கவும் இல்லை, வாக்களிக்காமல் போனதற்கான காரணத்தையும் விளக்கவில்லை. இது பிராந்தியத்தில் நிலவும் புதிய புவிசார் அரசியல் சாத்தியக்கூறுகளின் பிரதிபலிப்பாகும். இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்ற ஆப்கான் யுத்தத்தின் மத்தியில் அமெரிக்கா உடன் நிலவிய பதட்ட சூழலை தணிக்கும் பொருட்டு உருவாகி வளர்ந்தது தான் ரஷ்யாவுடனான பாகிஸ்தானின் உறவு.

சரியான நேரத்தில் மொஸ்கோவிற்கு சென்ற இம்ரான் கான், போர் துவங்கிய பிறகு புடினை சந்தித்த முதல் உலக தலைவர் என்ற நிலைக்கு உயர்ந்தார். பாகிஸ்தானில் உள்ள பல்வேறு அரசியல் நிகழ்வுகளை ஆய்வு செய்யும் முக்கிய நபர்களும், “தவறான ஆலோசனை மூலம் நிகழ்ந்த செயல் இது” என்று மேற்கோள்காட்டினார்கள். இந்த வார துவக்கத்தில் இஸ்லமாபாத்தில் இம்ரான் கானிடம், ஐரோப்பிய ஒன்றிய தூதுவர்கள் மேற்கத்திய நாடுகளுடன் இணைந்து ஐ.நாவின் சாசன கொள்கைகளை பின்பற்றுமாறு கேட்டுக் கொண்டதற்கு, உலக நாடுகள் ஏன் இந்தியா காஷ்மீரை தன்னோடு இணைத்துக் கொண்ட விவகாரத்தில் இதே போன்று ஏன் செயல்படவில்லை என்று கேள்வி எழுப்பினார்.

### வங்கதேசம் 1971, 2021 நினைவுகள்

வங்க தேசம் ரஷ்யாவுக்கு எதிராக வாக்களிக்காமல் போனதற்கு சொந்த காரணங்களைக் கொண்டுள்ளது. வெளியுறவுத்துறை அமைச்சர் ஏ.கே. அப்துல் மோமென் “உலகம் முழுவதும் அமையும் ஸ்திரத்தன்மையும் நிலவ வேண்டும் என்பது தான் டாக்காவின் நிலைப்பாடு” கூறியுள்ளார். நாங்கள் ஏற்கனவே அமைதி மூலம் தீர்வு காண வேண்டும் என்று உலக நாடுகளிடம் கூறியதைப் போலவே ஐ.நாவிலும் கூறியுள்ளோம். தற்போது நிலவும் சூழல் குறித்து நாங்கள் அதிக அக்கறை செலுத்துகிறோம். அதனால் தான் ஐ.நா. பொதுசபையின் பொதுச் செயலாளர் இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்து சமூக முடிவுகளை எட்ட முயல வேண்டும் என்று கூறுகிறோம்” என்று ஐ.நா.பொதுசபையின் தீர்மானத்திற்கு பிறகு டாக்காவில் மோமென் தெரிவித்தார்.

### ரஷ்யாவுக்கு எதிராக நேபாளம்

ரஷ்யாவுக்கு எதிரான தீர்மானத்தை புறக்கணித்த சீனா மற்றும் இந்தியாவுக்கு நடுவே அமைந்திருக்கும் இந்த குட்டி நாடு எடுத்த முடிவு, அதன் சொந்த அரசியல் பிரச்சனைகளை பிரதிபலிக்கிறது. அமெரிக்காவிடம் இருந்து 500 மில்லியன் டாலர் நிதியை நாட்டின் மேம்பாட்டு தேவைக்காக பெறலாமா வேண்டாமா என்ற குழப்பத்தில் நேபாளம் இருக்கும் போது இத்தகைய முடிவை எடுத்துள்ளது நேபாளம். 2020ஆம் ஆண்டு காத்மாண்டு வெளியிட்ட வரைபடத்தில் இந்தியாவின் நிலப்பகுதியை தன்னுடையதாக காட்டிய நிலையில் இருநாட்டிற்கும் இடையேயான உறவு தடுமாற்றத்தில் இருக்கிறது.

ஐ.நாவிற்கான நிரந்த நேபாள பிரதிநிதி அம்ரித் ராய் எந்தவொரு இறையாண்மையுள்ள நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் அரசியல் சுதந்திரத்திற்கு எதிரான எந்தவொரு அச்சுறுத்தலையும் அல்லது சக்தியைப் பயன்படுத்துவதையும் தனது நாடு எதிர்க்கிறது என்று UNGA இல் கூறினார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான மின் விநியோகம் மற்றும் சாலை கட்டுமானத்திற்காக அமெரிக்கா வழங்க இருக்கும் 500 மில்லியன் அமெரிக்க டாலர்களை ஏற்பது தொடர்பாக நடத்தப்பட்ட தொடர் போராட்டங்கள் போன்ற பெரிய உள்நாட்டு அரசியல் மோதலில் இருந்து மேம்பட்டு வருகிறது நேபாளம். நேபாள அரசியல் தலைவர்கள், அமெரிக்காவிடம் இருந்து நிதியைப் பெற்றுக் கொள்வது என்பது இந்தோ-பசிபிக் பகுதியில் சீனாவுக்கு எதிரான அமெரிக்க தலைமையிலான முகாமில் சேருவதற்கு சமம் என்று கருதுகின்றனர்.

பணத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் நேபாளத்துடனான உறவு குறித்து மறுபரிசீலனை செய்யப்படும் என்று அமெரிக்கா மிரட்டியதாக கூறப்படுகிறது. இந்த நிதியை (Millennium Challenge Corporation (MCC) பெற்றுக் கொள்வதற் கான காலக்கெடு முடிவதற்கு சில மணி நேரங்கள் இருக்கும் போது நேபாள நாடாளுமன்றத்தில் இந்த நிதியை பெறு வதற்கு மூன்றில் இரண்டு பங்கு உறுப்பி னர்கள் ஆதரவு அளித்துள்ளனர். எம்.சி.சி. என்பது பண்டோரா பெட்டியா அல்லது அன்பளிப்பா என்று கேள்வி எழுப் பிய சீனா, தன்னுடைய தேவையை பூர்த்தி செய்ய வற்புத்தும் ராஜதந்திரத்தை அமெரிக்கா பயன்படுத்தியுள்ளது என்றும் குற்றம் சாட்டியது.

### பூட்டான்

இந்தியாவின் துணைகோளாக கருதப்பட்ட பூட்டான் கடந்த சில காலங்களில் சுதந்திரமான்ன வெளிநாட்டுக் கொள்கைகளை பின்பற்றி வருகிறது. ரஷ்யாவுக்கு எதிராக நிலைப்பாட்டைக் கொண்டுள்ள பூட்டான் ஐ.நா. பொதுசபையில் அந்நாட்டிற்கு எதிராகவும் வாக்களித்தது.

நேபாளத்தைப் போன்றே இரண்டு பெரிய நாடுகளுக்கு மத்தியில் பூட்டான் இடம் பெற்றுள்ளது. எத்தகைய போட்டிக்குள்ளும் சிக்கிக் கொள்ள கூடாது என்று மிகவும் கவனமாக செயல்பட்டு வருகிறது இந்நாடு. பூடான் பிரதேசத்தில் சீனா உரிமை கோரியது, மூன்று-படி எல்லை ஒப்பந்தத்துக்காக ஒக்டோபர் 2021 இல் இரு தரப்புக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாக வழிவகை செய்தது.

“ரஷ்யாவின் பாதுகாப்பின்மை என்ற காரணத்திற்காக ஆதரவாக நாம் சென்றால், நமக்கு பிடிக்காத, நம்முடன் பிரச்னையில் ஈடுபட்ட அனைத்து அண்டை வீட்டுக்காரர்களின் வீடுகளையும் மக்கள் ஆக்கிரமிப்பு செய்யலாம் என்பது போல் ஆகிவிடும் என்று பூட்டான் கூறியுள்ளது. நீங்கள் ஒரு பெரிய சக்தியாக இருந்தால், உண்மையான அல்லது கற்பனையான பாதுகாப்பின்மை இருந்தால், நீங்கள் ஒரு சிறிய நாட்டின் இறையாண்மையின் மீது போர் தொடுக்கலாம் என்பதாகவே இருக்கிறது உக்ரைன் மீதான போருக்கு ரஷ்யாவின் வாதம்” என்று தி பூட்டானிஷ் இதழின் ஆசிரியர் டெஞ்சிங் லாம்சாங் ட்வீட் செய்துள்ளார்.

### மாலைதீவு

கடந்த ஆண்டு, சோலிஹ் ஆட்சியின் கீழ் அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது மாலைதீவு. மேலும் கடந்த யாமீன் ஆட்சியின் போது சீனாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த வெளியுறவுக் கொள்கையை ஒன்றுமில்லாமல் செய்த மாலைதீவு நிர்வாகமும் ரஷ்யாவுக்கு எதிராக வாக்களித்துள்ளது. மாலைதீவின் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல்லா ஷாஹித் ஐநா பொதுச் சபையின் தலைவராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் ரஷ்யா - உக்ரைன் விவகாரம் மிகப்பெரிய ஒன்றாக மாறும் அனைத்து சாத்தியக் கூறுகளையும் உள்ளடக்கியுள்ளது. எல்லைக்கு உள்ளும் வெளியும் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத் தன்மையை உறுதி செய்வதோடு நெருக்கடி சூழலை தவிர்க்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள பிராந்திய நாடுகளின் நெருக்கமான ஒத்துழைப்பின் அவசியத்தை நாங்கள் நினைவுப்படுத்துகிறோம் என்று மாலைதீவு பாதுகாப்புத் துறை அமைச்சர் மரியா திதி, மாலேவில் நடைபெற்ற கொழும்பு பதுகாப்பு மாநாட்டில் தெரிவித்தார்.

### ஆப்கானிஸ்தான்

தாலிபான்களால் கவிழ்க்கப்பட்ட ஆட்சியாளர்களின் பிரதிநிதிகளே ஐ.நா பொதுசபையில் ரஷ்யாவுக்கு எதிராக தங்களின் வாக்கை பதிவு செய்தனர். தாலிபான் அரசை அதிகாரப்பூர்வ ஆப்கானிஸ்தான் அரசாக இன்னும் அங்கீகரிக்கவில்லை என்ற நிலையில் தாலிபான் அரசு நடு நிலைத்தன்மையை கொண்டிருப்பதாக இந்த விவகாரம் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டது. ரஷ்யா உக்ரைன் மீது படையெடுத்துள்ள நிலையில் ஆப்கான் மக்களுக்கு தேவையான உதவிகளை செய்ய வேண்டிய நிலையில் இருக்கும் உலக நாடுகளின் கவனம் தற்போது வேறெங்கோ திசை திருப்பப்பட்டுள்ளது என்று ஆப்கான் மக்கள் கவலை தெரிவித்து வருகின்றனர்.

**- இந்தியன் எக்ஸ்பிரஸ்.**

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL


- 1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.

1.



(1) (2) (3)


2.



(1) (2) (3)

- உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்கு உரு B இல் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?

3.




உரு A உரு B

(1) 2 (2) 3 (3) 4


- 4, 5 ஆகிய வினாக்களில் வெறுமையாய் உள்ள அடைப்புக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

4.



(1) (2) (3)

5.




(1) (2) (3)

6. ஒரே கூட்டத்தைச் சேர்ந்த பொருள்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

7. கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

### விடைகள்

1. (2) 2. (1) 3. (2) 4. (3) 5. (2) 6. (3) 7. (3)

---

கல்வி tv CHANNEL-1

**16.03.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**16.03.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# முள்ளிமலைக்கு வந்த தேரர் குழு இளைஞர்கள் கூடியதால் கலைந்தது

அட்டாளைச்சேனை, மார்ச் 16

**முள்ளிமலை பகுதியில் புத்தர் சிலை வைக்க முயற்சித்த தேரர் குழுவினர் நேற்று முன்தினம் மாலை அங்கு வந்தனர். இதுபற்றித் தகவலறிந்து அங்கு இளைஞர்கள் கூடவே அங்கிருந்து கலைந்து சென்றனர்.**

அம்பாறை - அட்டாளைச்சேனையின் முள்ளி மலை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றை புராதன சின்னங்கள் உள்ளன எனத் தெரிவித்து, பௌத்த பிக்குகளும் சிங்கள இளைஞர்கள் சிலரும் அங்கு அனுஷ்டானங்களில் ஈடுபட்டனர். அத்துடன், கடந்த 9ஆம் திகதி புத்தர் சிலை வைக்க முயற்சிகளை எடுத்தனர்.

இதையடுத்து, அந்த இடத்தின் மக்களும் உள்ளூர் அரசியல்வாதிகளும் எடுத்த முயற்சியால் அவர்கள் பிக்கு தலைமையிலான குழு அங்கிருந்து வெளியேறியிருந்தது.

இந் நிலையில், மீண்டும் தேரர் தலைமையில் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் குழு குறித்த இடத்துக்கு வந்தது. இதுபற்றி தகவலறிந்து அந்த இடத்துக்கு விரைந்த முன்னாள் கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம். எஸ். உதுமா லெப்பை, நிந்தவூர் பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஏ.எம் தாஹீர், அட்டாளைசேனை பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ. அன்ஸில், பிரதேச மக்கள் மற்றும் இளைஞர்கள் பலரும் அங்கு கூடி எதிர்ப்பு வெளியிடவே அவர்கள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர். (ஐ)



## தாதிய மாணவர்களுக்கு விழிப்பூட்டல் நடவடிக்கை



மட்டக்களப்பு, மார்ச் 16

சுகாதார அமைச்சின் அனுசரணையுடன், கிழக்கு பல்கலைக்கழக மருத்துவபீட தாதிய மாணவர்களுக்கு, உணவு சுகாதாரம் தொடர்பான விழிப்பூட்டல் நடவடிக்கைகள் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் இ. உதயகுமாரின் வழிகாட்டலில், கோட்டைமுனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரி. மிதுன்ராஜ் தலைமையில், மட்டக்களப்பு பொதுச் சந்தையில் வைத்து இந்த விழிப்பூட்டல் செயல்பாடு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

தரமான உணவுப் பொருள்களை விற்பனை நிலையங்களில் கண்டறிதல், மனித பாவனைக்குதவாத பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தக்கர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுத்தல் உட்பட பல்வேறு உணவுப் பாதுகாப்பு தொடர்பாக விளக்கங்கள் இதன்போது வழங்கப்பட்டன. (ஐ)

## எரிபொருள் தட்டுப்பாட்டால் கழிவகற்றல் செயல்பாடுகளும் மீள தள்ளுவண்டிலுக்கு மாறின

கல்முனை, மார்ச் 16

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, கல்முனை மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் சேவையை தள்ளு வண்டில்களில் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று புதன்கிழமை தொடக்கம் இந்த நடைமுறை அமுலாகிறது. சமையலறைக் கழிவுகளை மாத்திரம் இந்தத் தள்ளு வண்டில்களில் ஒப்படைத்து, முழுமையாக ஒத்துழைப்பு வழங்குமாறு, பொது மக்களிடம் கல்முனை மாநகர சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. இது குறித்து மாநாகர சபை விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

“நாட்டில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு மத்தியிலும்




பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருந்த போதிலும் கல்முனை மாநகர சபையானது இருபதுக்கு மேற்பட்ட திண்மக் கழிவகற்றல் வாகனங்கள் மூலம் கழிவகற்றல் சேவையை முன்னெடுத்து வந்துள்ளது.

“எனினும், கடந்த சில நாள்களாக மாநகர சபையின் இவ் வாகனங்களுக்குத் தேவையான எவு டீசலைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. “எனவே, மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ. எம். றகீபின் அறிவுறுத்தலின் பேரில், அவசர மாற்று ஏற்பாடாக நாளை (இன்று) தொடக்கம் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட 6 வலயங்களிலும் 24 தள்ளு வண்டில்களைக் கொண்டு, சமையலறைக் கழிவுகளை, அதிலும் துர்நாற்றம் ஏற்படக்கூடிய கழிவுகளை மாத்திரம் சேகரித்து, அகற்றுவதற்கு மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. “இதன்படி உக்கும் கழிவுகளாயினும் உக்காத கழிவுகளாயினும் துர்நாற்றம் ஏற்படாத குப்பைகள் அனைத்தையும் மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் வாகனங்கள் வழமை போன்று சேவையில் ஈடுபடுத்தப்படும் வரை பொது மக்கள் தமது வீடுகளிலேயே வைத்து, முகாமை செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்” - என்றுள்ளது.

## அக்கரைப்பற்று மாநகர சபையால் தையல் இயந்திரங்கள் அன்பளிப்பு

அக்கரைப்பற்று, மார்ச் 16

அக்கரைப்பற்று மாநகர சபையின் 2021 பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பிரகாரம், அக்கரைப்பற்று பலாஹ் மற்றும் நகர வட்டாரங்களில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு, அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லாஹ் அகமட் ஸகியின் தலைமையில், மாநகர சபையின் ஹல்லாஜ் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினரும், அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத் தலைவருமான கிழக்கின் கேடயம் பிரதான செயல்பாட்டாளர் எஸ். எம். சபீஸ், அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் ஏ. சீ. எம். நுஹ்மான், அக்கரைப்பற்று நகர பள்ளி வட்டாரக் குழுத் தலைவர் எம்.ஐ.எம். ஜ/னைதீன் மற்றும் மாநகர சபை உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

## வரும் நாட்களில் மருந்தகங்களில் திடீர் பரிசோதனை நடத்த முடிவு!

கல்முனை, மார்ச் 16

கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள மருந்தகங்களில் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ. எல். எம். றிபாஸ் நேற்றுத் தெரிவித்தார்.

மருந்தகங்களில் நிலவும் குறைபாடுகள் மற்றும் மருந்து விற்பனையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பாக கண்டறியும் பொருட்டு மருந்தகங்களுக்கான அமைப்பின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டன என்றும் கூறினார்.

மருந்தகங்களில் நிலவும் குறைபாடுகளை தீர்ப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. குறைபாடுகள் கண்டறியப்பட்டு இதனை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப் பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், உரிய மருந்தகம் மூடப்படுமெனவும் கூறினார். பெரிய நீலாவணை தொடக்கம் பொத்துவில் வரையான எமது பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள தனியார் மருந்தகங்களில் எதிர்காலத்தில் சுகாதாரத் துறை அதிகாரிகள் திடீர் பரிசோதனை மேற்கொள்ளவுள்ளனர். நோயாளிகளுக்கு பாதுகாப்பான மருந்து, மாத்திரைகளை கொடுப்பதை உறுதிப் படுத்த வேண்டியது எமது பெரும் பொறுப்புகளில் ஒன்றாக காணப்படுவதாகவும் இதனை உரிய மருந்தக உரிமையாளர்கள் கருத்தில்கொண்டு செயல்பட வேண்டும்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ் நிலையை பயன்படுத்தி கூடுதலான விலைக்கு மருந்துப் பொருட்கள் விற்பனை செய்வதாக பொது மக்களால் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் கூறினார். (ஐ)



## பெண் உத்தியோகத்தர்கள் மருதமுனையில் கௌரவிப்பு

அக்கரைப்பற்று, மார்ச் 16

மருதமுனை பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக கடமையாற்றி வரும் பெண் கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வுநிலை உத்தியோகத்தர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வு, பெரியநீலாவணை புலவர்மணி சரிபுதீன் மகா வித்தியாலயத்தில், அதன் அதிபர் எம்.எம். முகம்மது நியாஸ் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், கொரோனா தொற்றுக் காலகட்டத்தில் கிராம மட்டத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய மேற்படி பெண் உத்தியோகத்தர்களே கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக மருதமுனை பிரதேசத்தின் முதல் பெண் கலாநிதியும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உதவி நூலகருமான முஹம்மட் மஜீத் மஸ்றூபா கலந்துகொண்டார்.

கௌரவிக்கப்பட்ட பெண் உத்தியோகத்தர்களுக்கு பாடசாலையின் பெண் ஆசிரியர்களால் சிறப்பு அன்பளிப்புப் பொருள் வழங்கி வைக்கப்பட்டதுடன், பாடசாலையின் வாசிகசாலைக்கு ஒரு தொகுதி நூல்களும் வழங்கப்பட்டன. (ஐ)

# ஆயிரக்கணக்கான ரஷ்யர்கள் பின்லாந்துக்கு வெளியேற்றம்

## பொருளாதார நெருக்கடிக்கு அஞ்சி

மொஸ்கோ, மார்ச் 16

உக்ரைன் மீதான போர் ஆரம்பித்த பிறகு ரஷ்யாவில் இருந்து வெளியேறுவோரது எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

தினமும் பல நூற்றுக் கணக்கான ரஷ்யர்கள் தரைவழியாகப் பின்லாந்து நாட்டுக்குள் படையெடுத்துள்ளனர் என்பதை அங்குள்ள குடிவரவு அதி காரிகள் உறுதிப்படுத்தி உள்ளனர். பின்லாந்தும் ஏனைய ஐரோப்பிய நாடுகளும் ரஷ்யாவுக்கான வான் போக்குவ ரத்துகளை முற்றாகத் துண்டித்துள்ளன.

அதனால் நாட்டை விட்டு மேற்கு நோக்கி இடம்பெயர விரும்புகின்ற ரஷ்யர்கள் முதலில் தரை வழியாகப் பின்லாந்துக்குள் சென்றே அங்கிருந்து மூன்றாவது நாடுகளுக்குச் செல்ல முடிகிறது.

ரஷ்யாவின் சென் பீற்றர்ஸ் பேர்க்- பின்லாந்தின் ஹெல்சிங்கி ஆகிய நகரங்களை இணைக்கின்ற அலெக்ரோ ரயில் சேவை கடந்த சில நாட்களாக பயணிகள் முன்பதிவால் நிறைந்துள்ளது என்று அதன் நிர்வாகம் கூறுகிறது. ரஷ்யாவில் தங்கியிருந்த வெளிநாட்டவர்களும் மேற்குலகின் பொருளாதாரத் தடைகளால் நாட்டின் தேசிய பொருளாதாரம் நெருக் கடிக்குள் சிக்குவது கண்டு அஞ்சுகின்ற ரஷ்யர்களும் மேற்கலகிற்கான ஒரே வழியாகிய பின்லாந்து ரயில் மூலமாக வெளியேறிவருகின்றனர்.




மேற்குலகத் தடைகள் ரஷ்யர்களது நாளாந்த வாழ்வை நிச்சயமற்ற நிலைக்குள் தள்ளியுள்ளது. அதேசமயம் உள்நாட்டில் மக்கள் கொந்தளிப்புகளை ஒடுக்குவதற்

காக அதிபர் புடின் இராணுவச் சட்டத்தை பிரகடனப்படுத்தக் கூடும் என்ற அச்சமும் அங்கு எழுந்துள்ளது.

பின்லாந்து வரலாற்று ரீதியாக ரஷ்யாவுடன் போர்களைச் சந்தித்து விடுதலைபெற்ற நாடாகும். சுவிடிஷ் பேரரசின் ஒரு பகுதியாக இருந்த காலம் தொட்டு கடந்த நான்கு நூற்றாண்டுகளில் அது தனது கிழக்கு எல்லையில் அமைந்துள்ள ரஷ்யாவுடன் டசின் கணக்கான மோதல்க ளில் ஈடுபட்டுள்ளது.1939-40 மற்றும் 1941-44 காலப்பகுதியில் சோவியத் ஒன்

றியத்துடன் அது போர்களைச் சந்தித்துள் ளது.ஆயினும் அதன் பிறகு பின்லாந்து மேற்கிற்கும் கிழக்குக்கும் இடையே எந்தப்பக்கமும் சாராமல் நடுநிலை வகித்து வந்தது.

உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பை அடுத்து சுமார் 5.53 மில்லியன் மக்கள் வாழும் பின்லாந்து தேசத்தவர்களிடையே (அவர்களில் அரைப் பங்கினர் ரஷ்யக் குடிமக்கள்) நேட்டோவில் இணைவதற்கான ஆதரவு அதிகரித்துவருகிறது. நோர்டிக் நாடான பின்லாந்து ரஷ்யாவு டன் ஆயிரத்து 300 கிலோ மீற்றர் நீளமான எல்லையைக் கொண்டுள்ள நாடு என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



## லண்டனை ஐந்தே நிமிடங்களில் தாக்கும் திறன் உள்ள ஏவுகணை!

### ரஷ்யா சோதனை

மொஸ்கோ, மார்ச் 16

அணு ஆயுதங்கள் உள்ளிட்ட ஆயுதங்களை சுமந்து சென்று லண்டனை ஐந்தே நிமிடங்களில் தாக்கக்கூடிய புதிய தலைமுறை சிர்கான் ஹைப்பர்சொனிக் ஏவுகணை சோதனை காட்சிகளை ரஷ்யா வெளியிட்டுள்ளது.

தொடர்ந்து ரஷ்யாவை எரிச்சலூட்டினால் மேற்கத்தேய நாடுகள் மீது ஹைப்பர்சோனிக் அணுசக்தி தாக்குதலை நடத்த முடியும் என மிரட்டும் வகையில் இந்த ஏவுகணை சோதனை இடம்பெற்றுள்ளதாக பாதுகாப்புத் துறை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யாவின் வடக்கில் வெள்ளைக் கடலில் அமைந்துள்ள அட்மிரல் கோர்ஷ்கோவ் என்ற போர்க்கப்பலில் இருந்து இந்த ஏவுகணை ஏவப்பட்டதாக தெரியவருகிறது.

உக்ரைன் விவகாரத்தில் மேற்கத்திய நாடுகள் தலையிட்டால் வரலாற்றில் சந்தித்திராத பெரும் விளைவுகளை சந்திக்க வேண்டியேற்படும் என்ற ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், மற்றும் அவரது உயர் அதிகாரிகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் புதிய தலைமுறை சிர்கான் ஹைப்பர்சொனிக் ஏவுகணை சோதனை காட்சிகள் ரஷ்யாவால் வெளியிடப்பட்டுள்ளன.

ஏற்கனவே, ரஷ்ய அணு ஆயுதப் படைகளை உச்ச எச்சரிக்கை நிலையில் இருக்குமாறு புடின் உத்தர விட்டதை அடுத்து பேரழிவுகரமான மோதல் அணுசக்தி மோதலாக மாறக்கூடும் என்ற அச்ச நிலை உருவானது.

இவ்வாறான நிலையில் அணு ஆயுதங்களை சுமந்து சென்று 7000 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள இலக்கை சில நிமிடங்களில் துல்லியமாகத் தாக்கக்கூடிய புதிய தலைமுறை சிர்கான் ஹைப்பர்சொனிக் ஏவுகணையை சோதனை செய்த காட்சிகளை ரஷ்யா வெளியிட்டுள்ளமை பதற்றங்களை மேலும் அதிகரித்துள்ளது.

ரஷ்யா ஏற்கவே சிர்கான் ஹைப்பர்சொனிக் ஏவுகணை சோதனையை நடத்தியுள்ளது. ரஷ்யாவிடம் உள்ள இந்த வகை ஏவுகணை ஒலியின் வேகத்தை விட ஒன்பது மடங்கு வேகத்தில் பறக்கும் என புடின் முன்பு கூறியிருந்தார்.

ஹைப்பர்சொனிக் ஏவுகணையின் அதிவேகம், தந்திரோபாயம், கண்ணுக்குப் புலப்படாமை போன்றவற்றால் இவற்றை கண்காணிப்பதும் இடைமறிப்பதும் கடினம் என சில மேற்கத்திய வல்லுநர்கள் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)



## பிரிட்டன் முழுவதுமே 50 வீத கோவிட் தொற்று

லண்டன், மார்ச் 16

கடந்த வாரத்தில் பிரித்தானியா முழுவதும் ஏறக்குறைய 50 சதவீதம் கோவிட் தொற்றுகள் அதிகரித்துள்ளது.

ஆனால், அமைச்சர்கள் இந்த தரவை அகற்றிவிட்டு முன்னேற விரும்புகிறார்கள் என கோவிட் நிபுணர் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த ஏழு நாட்களில், 444,201 கொரோனா வைரஸ் தொற்றுகள் பதிவாகியுள்ளன. முந்தைய வாரத்தை விட 48.1 சதவீத அதிகரிப்பு ஆகும்.

தேசிய புள்ளியியல் அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட கொவிட் தொற்று கணக்கெடுப்பின் படி, ஜனவரி பிற்பகுதியில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து பிரித்தானியா முழுவதும் தொற்றுகள் அதிகரிப்பதைக் காட்டுகிறது.

இந்தநிலையில், லண்டன் கிங்ஸ் கல்லூரியின் மரபணு தொற்றுநோயியல் பேராசிரியர் டிம் ஸ்பெக்டர், கட்டுப்பாடுகள் திரும்பப் பெறப்படுவதாக கவலை தெரிவித்தார். (அ)

## ஆயுதங்களைப் போட்டுவிட்டு ஓடும் ரஷ்ய இராணுவத்தினர்!

### உக்ரைன் ஜனாதிபதி தெரிவிப்பு

கீவ், மார்ச் 16

ஆயுதங்களைப் போட்டுவிட்டு போர்க்களத்தை விட்டு ரஷ்ய படையினர் ஓடுகின்றனர். ரஷ்ய துருப்புக்கள் விட்டுச் சென்ற ஆயுதங்களைக் கொண்டு எங்கள் நகரங்களை நாங்கள் பாதுகாக்கிறோம். அவர்களே எங்களுக்கு ஆயுதங்களை வழங்கக் கூடியவர்கள் என உக்ரைன் ஜனாதிபதி என்று வொலோடிமிர் ஸெலென்ஸ்கி கூறியுள்ளார்.

ரஷ்யாவுடனான அமைதிப் பேச்சுவார்த்தை நான்கு சுற்று நிறைவடைந்த நிலையில், நேற்று ஐந்தாம் சுற்று பேச்சுவார்த்தை நடத்த இரு நாடுகளின் பிரதிநிதிகளும் ஆயத்தமாகினர்.

இந்த பேச்சுவார்த்தை துருக்கியில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெறும் என உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி கூறியுள்ளார்.

பேஸ்புக்கில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ள அவர், லூஹான்ஸ்க் மற்றும் கிய்வ் பகுதிகளில் இருந்து 3,806 பேர் தப்பிச் செல்ல உக்ரேனிய படைகளால் உதவ முடிந்தது எனத் தெரிவித்துள்ளார்.

முற்றுகையிடப்பட்ட துறைமுக நகரான மேரியுபோலை அடைய முடியாமல் 100 தொன் சரக்குகளின் வாகன தொடரணி பெர்டியன்ஸ்கில் இன்னும் சிக்கியிருப்பதாகவும் அந்தக் காணொளியில் அவர் குறிப்பிட்டுள்ளார். ரஷ்ய துருப்புக்கள் குழப்பத்தில் உள்ளனர். இது போன்ற எதிர்ப்பை உக்ரைனில் அவர்கள் எதிர்பார்க்க வில்லை என்றும் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். (அ)





## சீனாவில் மீண்டும் வேகமெடுக்கும் கோவிட் தொற்று!

### மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு!

பீஜிங், மார்ச் 16

சீனா தனது மோசமான கொரோனா வைரஸ் தொற்று பரவலை எதிர்த்து போராடி வருகின்றது.

சீனா தற்போது கொவிட் தொற்றின் ஓமிக்ரோன் பிஏ.2 துணை மாறுபாட்டின் வேகமான பரவலைக் கட்டுப்படுத்த போராடி வருகின்றது.

இந்தநிலையில், சீனா தொற்றுநோய் தொடங்கியதிலிருந்து அதன் அதிகபட்ச தினசரி பாதிப்பு எண்ணிககையை பதிவுசெய்தது.

சீனாவில் கடந்த 24 மணித்தியாலத்தில் 5,280 புதிய கொரோனா வைரஸ் பாதிப்புகள் பதிவாகியுள்ளன,.

2022ஆம் ஆண்டு தொற்றுகளில் 30 சதவீதத்துக்கும் அதிகமானவை இப்போது வடகிழக்கு மாகாணமான ஜிலினில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1,87,400 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட ஜிலின், அதன் 24.1 மில்லியன் குடியிருப்பாளர்கள் மாகாணத்திற்கு வெளியே அல்லது மாகாணத்திற்குள் அல்லது மாகாணத்திற்குள் பல்வேறு பகுதிகளுக்குச் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளது.

சமீபத்திய சாதனை எழுச்சி, 17 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வசிக்கும் தொழில்நுட்ப மையமான ஷென்சென் உட்பட குறைந்தது 10 நகரங்களையும் மாவட்டங்களையும் முடக்கநிலைக்குள் வைக்க அதிகாரிகளை கட்டாயப்படுத்தியுள்ளது. (அ)



# மூன்றாவது சுற்றில் வீழ்ந்தார் எம்மா!

கலிபோர்னியா, மார்ச் 16

அமெரிக்காவில் நடக்கும் இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் தொடரில் மூன்றாவது சுற்றில் தோற்று வெளியேறினார் பிரிட்டனின் எம்மா ரடுகானு.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் இந்தியன் வெல்ஸ் ஓப்பன் ரென்னிஸ் நடக்கிறது. இதில், நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் பிரிட்டனின் எம்மா ரடுகானு, குரோசியாவின் பெட்ராவை எதிர்கொண்டார்.

மூன்று செற்களாக நடந்த இந்தப் போட்டியில் 6 - 7 (3-7) என்ற கணக்கில் முதல் செற்றை எம்மா பெட்ராவிடம் இழந்தார்.

எனினும், இரண்டாவது செற்றில் எழுச்சி கண்ட எம்மா 6 - 4 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். எனினும், மூன்றாவது செற்றில் 5 - 7 என்ற கணக்கில் எம்மா தோல்வியடையந்தார். இதனால், தொடரிலிருந்தும் வெளியேறினார். (ஐ)




# அவுஸ்திரேலியாவிடம் மேற்கிந்தியா படுதோல்வி!

வெலிங்டன், மார்ச் 16

மேற்கிந்தியத் தீவுகளின் அணி மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணத்தில் முதல் இரு போட்டிகளில் மிகவும் வலுவான அணிகளான நியூசிலாந்து, இங்கிலாந்தை எதிர்கொண்டது. பரபரப்பான முறையில் நடைபெற்ற இரு போட்டிகளிலும் நூலிழையில் வெற்றிபெற்று அசத்தியது. இதனால் இந்த உலகக்கிண்ணத்தில் இதர அணிகளுக்குக் கடும் சவாலை அளிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், 3ஆவது போட்டியில் இந்தியாவிடம் தோல்வியடைந்தது.

இந்த நிலையில் நேற்று வெலிங்டனில் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலியாவுடன் மோதியது மேற்கிந்தியத் தீவுகள் அணி. அவுஸ்திரேலிய அணி இதுவரை தோல்வியையே சந்திக்காமல் அட்டகாசமாக விளையாடி வருகிறது. இதனால் மே.இ. தீவுகள் அணி, ஆஸி. அணியை எப்படி எதிர்கொள்ளும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற மே.இ. தீவுகள் அணி, துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

ஆஸி. அணி அற்புதமாக பந்துவீசியதால் மே.இ. தீவுகள் அணி 45.5 ஓவர்களில் 131 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அணித் தலைவி ஸ்டஃபானி ரெய்லர் 50 ஓட்டங்கள் எடுத்தார்.

ஆஸி. அணியின் எல்லீஸ் பெர்ரி, கார்ட்னர் ஆகிய இருவரும் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

இதன்பிறகு விளையாடிய அவுஸ்திரேலிய அணி, 30.2 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 132 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

ரேச்சல் ஹேய்ன்ஸ் 83 ஓட்டங்கள் எடுத்துக் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

# இங்கிலீஷ் பிறீமியர் உதைபந்து; ரொனால்டோ உலக சாதனை!

மன்செஸ்டர், மார்ச் 16

உதைபந்தாட்டப் போட்டிகளில் அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற சாதனையை கிறிஸ்ரியானோ ரொனால்டோ படைத்துள்ளார்.

போர்த்துக்கல் தேசிய அணிக்காகவும் தற்போது மன்செஸ்டர் யுனைற்றெட் கழகத்துக்காகவும் விளையாடி வருகிறார் ரொனால்டோ.

தற்போது நடந்து வரும் இங்கிலீஷ் பிறீமியர் லீக் தொடரில் ரொட்டன்ஹாம் அணிக்கு எதிரான போட்டியில் ரொனால்டோ ஹட்ரிக் கோல் அடித்தார். இதன் மூலம், 807 கோல்களை அவர் அடித்தார். இது புதிய உலக சாதனையாகும். முன்னர், ஆஸ்திரியாவின் வீரரான ஜோசப் பைகான் 805 கோல்கள் அடித்ததே இதுவரை சாதனையாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியில், ரொனால்டோவின் ஹட்ரிக் கோலால் மன்செஸ்டர் யுனைற்றெட் அணி 3-2 என்ற கோல் கணக்கில் ரொட்டன்ஹாம் அணியை வெற்றி பெற்றது.

இதனிடையே, ரொனால்டோ அடித்த ஹட்ரிக் கோல், அவரின் 59ஆவது ஹாட்ரிக் ஆகும். இது அவரின் கழக வாழ்வில் 49ஆவது ஹட்ரிக் ஆகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)







# ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணம்! சென். பற்றிக்ஸ் - யாழ். கல்லூரி மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 29ஆவது ராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்துக்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இரு கல்லூரிகளுக்கும் இடையிலான பொன் அணிகள் போரின் தொடர்ச்சியாக நடக்கும் இந்தப் போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் வருடம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி ஏ. எவ். டெஸ்வின் தலைமையிலும், யாழ்ப்பாணக் கல்லூரி அணி என். விஷ்ணுகாந் தலைமையிலும் களமிறங்கவுள்ளது.

முன்னதாக நடந்த பொன் அணிகளின் போர் பெருந்துடுப்பாட்டப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 10 விக்கெட்களால் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்தியாவுடனான டெஸ்ட் தொடரை இழந்தது இலங்கை

பெங்களூர், மார்ச் 16

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என முழுமையாக வென்றுள்ளது இந்திய அணி.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையே மொகாலியில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இந்திய அணி இனிங்ஸ் வெற்றியை அடைந்தது. பெங்களூரில் பகலிரவு ஆட்டமாக இரண்டாவது டெஸ்ட் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. முதல் இனிங்ஸில் 59.1 ஓவர்களில் 252 ஓட்டங்கள் எடுத்தது. ஷ்ரேயாஸ் ஐயர் 92 ஓட்டங்கள் எடுத்தார்.

இலங்கை அணி முதல் இனிங்ஸில் 35.5 ஓவர்களில் 109 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. பும்ரா 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதன்பிறகு இரண்டாவது இனிங்ஸில் இந்திய அணி 68.5 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 303 ஓட்டங்களுடன் ட்டத்தை இடைநிறுத்தியது.

பிரவீன் ஜெயவிக்கிரம 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

இலங்கை அணி வெற்றி பெற 447 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 2ஆம் நாள் முடிவில் இலங்கை அணி 7 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 28 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நேற்றுமுன்தினம் கருணாரத்னவும் குசல் மெண்டிஸூம் நன்கு விளையாடி ஆரம்பத்தில் சிறிது நேரம் விக்கெட் விழாமல் பார்த்துக் கொண்டார்கள். அணியின் மொத்த ஓட்டம் 100-ஐ நெருங்கும் முன்பு குசல் மெண்டிஸ் 54 ஓட்டங்களு டன் அஸ்வின் பந்தில் ஆட்டமிழந்தார்.

மத்தியூஸை ஓட்டத்துடன் போல்ட் செய்தார் ஜடேஜா. தனஞ்சய டி சில்வா 4 ஓட்டங்களில் அஸ்வின் பந்தில் ஆட்டமிழந்தார்.

3ஆம் நாள் முதல் பகுதியில், தேநீர் இடைவேளையின்போது இலங்கை அணி, 39 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 151 ஓட்டங்கள் எடுத்தது.

அணித் தலைவர் கருணாரத்ன 67, நிரோஷன் டிக்வெல்ல 10 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்கள். இலங்கை அணியின் கைவசம் 6 விக்கெட்கள் இருந்த நிலையில் வெற்றிக்கு 296 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

தேநீர் இடைவேளைக்குப் பிறகு மீதமுள்ள விக்கெட்களை எளிதாக வீழ்த்தியது இந்தியா. கருணாரத்ன 174 பந்துகளில் 107 ஓட்டங்கள் எடுத்து பும்ரா பந்தில் போல்ட் ஆனார்.

இலங்கை அணி 2ஆவது இனிங்ஸில் 59.3 ஓவர்களில் 208 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. அஸ்வின் 4 விக்கெட்களும் பும்ரா 3 விக்கெட்களும் எடுத்தார் கள். பெங்களூர் டெஸ்டை 238 ஓட்டங்களால் வென்ற இந்திய அணி, இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என வென்றுள்ளது.

# அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு பொறுப்பேற்க முடியாது!

## நழுவுகின்றது பங்காளிக்கட்சி



**கொழும்பு, மார்ச் 16**

**அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கான பொறுப்பை தமது கட்சியினால் ஏற்றுக்கொள்ளமுடியாது என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.**

நாட்டின் தற்போதைய பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீண்டு வருவதற்கான வேலைத்திட்டத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, அரசாங்கத்துக்கு சமர்ப்பித்துள்ளது.

எனினும் அரசாங்கம் அதனை செயற்படுத்தாத போது, அரசாங்கத்தின் வீழ்ச்சியில் பங்கேற்க முடியாது என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நிகழ்வு ஒன்றின்போது செய்தியாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர், அரசாங்கத்தின் முறையான முகாமைத்துவம் இல்லை என்று குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கைக்கு வரும் உணவு மற்றும் எரிபொருள் கப்பல்கள் திரும்பிச் செல்வதில்லை.

இலங்கையிலேயே நங்கூரமிட்ட நிலையில் தாமதக் கட்டணங்களையும் செலுத்திப் பொருட்கள் இறக்கப்படுகின்றன.

இதனால் அரசாங்கத்துக்கு பொருட்களை இறக்குமதி செய்வதைக்காட்டிலும் மேலதிக செலவுகள் ஏற்படுகின்றன.

இதற்கு அரசாங்கத்தின் உரிய முகாமைத்துவமின்மையே காரணம்-என்றார். (அ)

# மக்களின் நிலை எண்ணி வருத்தமடைகின்றேன்!

## ஆளும் கட்சி உறுப்பினர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 16

நாட்டு மக்கள் தற்போது எதிர்நோக்கியுள்ள நெருக்கடியான நிலைமை சம்பந்தமாக வருத்தப்படுவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த கஷ்டமான நிலைமையில் இருந்து மக்களை மீட்க ஜனாதிபதி, பிரதமர் உட்பட ஆட்சியாளர்கள் எடுக்க முடிந்த அனைத்து முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

மக்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமையில் இருந்து அவர்களை எப்படி மீட்டெப்பது என்பது தெரியவில்லை. அன்றாடம் உழைக்கும் குறைந்த வருமானம் பெறும் மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மின் வெட்டி, எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு இவர்களை பெரிதும் பாதிக்கும். உடனடியாக இதற்கு ஒரு தீர்வை கண்டாக வேண்டும்.

நாட்டை தற்போதைய நிலைமையில் இருந்து மீட்டு, மக்களுக்கு நிவாரணங்களை வழங்க ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதியமைச்சர் ஆகியோர் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் முயற்சிகள் எதனையும் மேற்கொள்ளாமல் இல்லை.

கடனுதவிகளை வழங்கும் தரப்புடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

மேலும் சில தரப்பினருடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்தி வருகின்றோம்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்த வேண்டாம் என எமது அமைச்சர்களே கூறியதால், நிதியத்துடனான செயற்பாடுகளை மேற்கொள்ள தாமதமானது.

இறுதியில் சர்வதேச நாணய நிதியத்திடமே செல்ல நேரிட்டுள்ளது. கடன்களை மறுசீரமைப்பு செய்து, சுமை குறைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. மறுபுறம் நிவாரண அடிப்படையில் டொலர்களை பெற்று, டொலர் தட்டுப்பாட்டை நீக்கி மக்களுக்கு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# நெடுந்தீவு சிறுமியை கொன்ற குற்றவாளியே கர்ப்பிணிப் பெண்ணைக் கொலை செய்தார்!

## சி.ஐ.டியினரின் விசாரணையில் கண்டறிவு

கொழும்பு, மார்ச் 16

ஊர்காவற்றுறை பகுதியில் 2017 ஜனவரி 24ஆம் திகதி கொடூரமாக அடித்துக் கொலை செய்யப்பட்ட 7 மாத கர்ப்பிணித் தாயின் வழக்கு விசாரணைகள் 5 ஆண்டுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெடுந்தீவில் 12 வயதுச் சிறுமியை வன்புணர்ந்து கொலை செய்த குற்றத்துக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரே இவ்வாறு கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டார்.

ஊர்காவற்றுறை பகுதியில் 2017 ஜனவரி மாதம் 24ஆம் திகதி பட்டப்பகலில் வீடு புகுந்து ஒரு பிள்ளையின் தாயும் ஏழு மாத கர்ப்பிணியுமான ஞானசேகரன் ஹம்சிகா (வயது-27) என்ற பெண் அடித்துப் படுகொலை செய்யபட்டார். ஊர்காவற்றுறை நீதிமன்ற உத்தியோகத்தரான பெண்ணின் கணவர், பணிக்குச் சென்றிருந்த போதே இந்தக் கொலை நடந்தது.

படுகொலை சம்பவம் தொடர்பில் சகோதரர்களான இருவர் அன்றைய தினம் மாலை மண்டைதீவு சந்தியில் உள்ள ஊர்காவற்றுறை பொலிஸ் காவலரணில் கடமையில் இருந்த பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கின் கண் கண்ட சாட்சியாக பொலிஸாரால் முன்னிலைப்படுத்தப்பட்ட வாய் பேச முடியாத சிறுவன் அடையாள அணிவகுப்பில் சந்தேக நபர்கள் இருவரையும் அடையாளம் காட்டியிருந்தார்.

இந்த நிலையில் ஊர்காவற்றுறை நீதிமன்றில் 5 வருடங்களாக சுருக்கமுறையற்ற விசாரணைகள் இடம்பெற்று வருகிறது. சந்தேகநபர்கள் இருவரும் 17 மாதங்களின் பின் மேல் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கொலை இடம்பெற்று ஒரு வருடமாக பொலிஸாரினால் வழக்கு இழுத்தடிப்புச் செய்யப்பட்டதால் ஊர்காவற்றுறை நீதிமன்றின் அப்போதைய நீதிவான் ஏ.எம்.எம். றியாழ், விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸாரிடமிருந்து குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு மாற்றுமாறு உத்தரவிட்டார்.

இந்த நிலையில் கர்ப்பிணிப் பெண் கொலை செய்யப்பட்டு 5 ஆண்டுகளின் பின் பிரதான சந்தேக நபர் குற்றவியல் விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெடுந்தீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 12 வயது சிறுமி 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தி கொலை செய்யப்பட்டார்.

கொலையாளியான நெடுந்தீவைச் சேர்ந்த ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரான ஜெகதீஸ்வரனுக்கு 2017ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. அப்போதைய யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தண்டனை தீர்ப்பளித்திருந்தார்.

சிறுமியைக் கொலை செய்த குற்றவாளியே ஊர்காவற்றுறை கர்ப்பிணிப் பெண்ணையும் கொலை செய்தார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த வழக்கில் அண்மையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் குற்ற விசாரணை பிரிவினர் முதன்மை சந்தேக நபரை அவரது தண்டனை சிறைச்சாலையில் வைத்து கைது நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தினர்.

விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில் சந்தேக நபரை வரும் 28ஆம் திகதிவரை கட்டுக்காவலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார். (அ)

# 2 கோடி ரூபா பெறுமதியான 'ஐஸ்' பேசாலையில் சிக்கியது

மன்னார், மார்ச் 16

மன்னார் பேசாலை ஜூட் வீதி பகுதியில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கோடி ரூபாவுக்கும் மேல் பெறுமதியான 2.70 கிலோ கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவரை கைது செய்துள்ளதாக பேசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வு தகவல் ஒன்றை அடுத்து, நேற்றுமுன்தினம் இரவு பேசாலையில் உள்ள வீடு சோதனையிடப் பட்டுள்ளதுடன் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

வீட்டில் இருந்த 30 வயதான நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். ஐஸ் போதைப்பொருள் இந்தியாவில் இருந்து கடல் வழியாக இலங்கைக்கு கடத்தி வரப்பட்டு, விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் புதிய இருமாடி கட்டடம் திறந்துவைப்பு



கிளிநொச்சி, மார்ச் 16

கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் 29 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய இரு மாடி வகுப்பறைக் கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழுள்ள சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்துக்குரிய புதிய இருமாடி வகுப்பறைக் கட்டடம் 2019ஆம் ஆண்டின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் 29 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது.

இந்தக் கட்டடத்தை நேற்று முற்பகல் 10 மணிக்கு வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

பாடசாலை முதல்வர் பெருமாள் கணேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார், கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் இ.கமலராஜன், வலயக் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலையில் கடமையாற்றிய ஓய்வு நிலை அதிபர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி கல்வி வலயத்தின் பின்தங்கிய பாடசாலையில் ஒன்றாக கானப்படும் மேற்படி பாடசாலையானது 200 இற்கும் மேற்பட்ட மாணவர்களை கொண்டு இயங்கி வருகின்றபோதும் பல்வேறு தேவைப்பாடுகள் நிறைந்த பாடசாலையாக காணப்படுகின்றது. அதிபரின் அயராத முயற்சி காரணமாக இந்த கட்டடம் அமைக்கப்பட்டு திறந்து வைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஐக்கிய மக்கள்...

பேரணியாக சென்ற மக்கள் ஜனாதிபதி செயலகத்தையும் முற்றுகையிட்டு நுழைய முயன்றவர்களாலும், வளாகத்துக்குள் சவப்பெட்டியை வீசியதாலும் அங்கு பதற்ற நிலை உருவானது.

பொருட்கள் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றத்தைக் கண்டித்து ஐக்கிய மக்கள் சக்தி தலைநகர் கொழும்பை முடக்கும் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது. முழுநாடும் அழிவில் நாட்டைக் காப்போம் என்ற தொனிப் பொருளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நேற்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமான இந்தப் பேரணியில் நாட்டின் பல இடங்களிலிருந்தும் போராட்டத்தை ஆரம்பித்த போராட்டக்காரர்கள் 10 பேர ணிகளாக கொழும்புக்குள் நுழைந்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம், பி. டி. சிறிசேன மைதானம் ஆகிய இடங்களில் கூடிய போராட்டக்காரர்கள் ஒன்று கூடி அங்கிருந்து நகர்ந்து காலிமுகத் திடலை சென்றடைந்தனர். அங்கு ஜனாதி பதி செயலகம் முன்பாக அவர்கள் "கோட் டாபயவை வீட்டுக்கு போ", "ஜனாதிபதி தேர்தலுக்கு அழைப்பு விடுக்கவும்" என்ற கோஷங்களையும் அவர்கள் எழுப்பினர். அத்துடன், சுலோக அட்டைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

இதன்போது, ஜனாதிபதி வளாகத்துக்குள் சவப்பெட்டியும் மாலையும் வீசப்பட்டன. தொடர்ந்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வெளியே வருமாறு கோரியும் அவர்கள் கோஷங்களை எழுப் பியதுடன் உள்ளேயும் நுழைய முயன்ற னர். பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினர் தடுத்து நிறுத்தினர். அவர்களை மீறி உள்ளே நுழைய முயன்றவர்களால் பதற்றம் ஏற் பட்டது.

சஜித் தலைமையில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் அவரின் கட்சியினர், பங்காளி கட்சியினர் பொதுமக்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

## இறுதி போர்...

தாக்குதல்களுக்கு காரணமானவர்களை கண்டு பிடித்து நீதியை நிலைநாட்ட தவறியுள்ளது. இதனால், இலங்கை கத்தோலிக்க திருச்சபை சர்வதேசத்தின் உதவியை நாடவேண்டிய சூழ்நிலையும் உருவாகியுள்ளது என்றும் கூறினார்.

கிறிஸ்தவர்கள் நினைவுகூரும் தவக்காலத்தில் ஒவ்வொரு மறைமாவட்ட ஆயர்களும் தங்கள் மறைமாவட்ட மக்களுக்கு தவக்கால திரு மடலை எழுதியுள்ளனர். மன்னார் மறைமாவட்ட ஆயர் எழுதியுள்ள திருமடலிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஆட்சியாளர்களின் அசமந்த போக்கால் அனைத்து மக்களும் ஆழ்ந்த அதிருப்தியிலும் ஏமாற்றத்திலும் உள்ளனர். ஆகவே பவுலடியாரின் கூற்றுப்படி இறைப்பற்றும் கண்ணியமும் நிறைந்தவர்களாய் தொல்லையின்றி அமைதியோடு வாழ அரசர்களுக்காகவும் உயர் நிலையில் உள்ள எல்லா மனிதர்களுக்காகவும் மன்றாடுவோம்.

அருளின் காலமாகிய தவக்காலத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் மீண்டும் காலடி பதித்துள்ள இவ்வேளையில் நாம் மனமாற்றம் பெறுவதற்கும் நம்மைப் புதுப்பித்துக் கொள்வதற்கும் திருமறையில் தெரிவித்திருப்பது போல் "இதுவே தகுந்த காலமாகும்" "உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள். மாறாக ஆண்டவரின் குரலைக் கேட்பீர்களாக"

இலங்கை நாடு இன்று பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு விலைவாசி உயர்வு மின்சாரத் தடை போன்றவை சாமானிய மக்களை மட்டுமல்ல நாட்டில் உள்ள அனைத்து தரப்பினரையும் வெகுவாகப் பாதித்து வருகின்றன.

இது மட்டுமல்ல இலங்கை அரசானது ஈஸ்டர் தினத் தாக்குதல்களுக்கு காரணமானவர்களை கண்டுபிடித்து நீதியை நிலை நாட்ட தவறியுள்ளது. இதனால் இலங்கை கத்தோலிக்க திருச்சபை சர்வதேசத்தின் உதவி நாட வேண்டிய சூழ் நிலையும் உருவாகியுள்ளது.

அத்துடன் இறுதிப் போரில் நடந்தேறிய போர்க் குற்றங்களுக்கு நீதியை நிலை நாட்டாமல் சர்வதேசத்தின் கோரிக்கைகளையும் புறந்தள்ளிவிட்டு தன்னிச்சையாக செயல்படும் ஓர் அரசாங்கமே இன்று ஆட்சியில் உள்ளது.

இவ்வாறு ஆட்சியாளர்களின் அசமந்த போக்கினால் அனைத்து மக்களும் ஆழ்ந்த அதிருப்தியிலும் ஏமாற்றத்திலும் உள்ளனர் - என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## சம்பந்தன்...

என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

மேலும், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மூன்று பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடனும் பேசிய பின்னரே ஜனாதிபதியுடனான சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வர் என்றும் அறிவித்தார். இது அவரின் தன்னிச்சையான முடிவு அல்ல என்றும் கூறியுள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தவிர, நேற்றைய சந்திப்பில் பங்கேற்ற ரெலோ கட்சியின் தலைவர், இன்றைய தினம் (நேற்று) ஜனாதிபதியுடனான சந்திப்பு இடம்பெற்றிருந்தால் தாம் அதில் கலந்துகொண்டிருக்க மாட்டோம் என்றும், சந்திப்பு பிற்போடப்பட்டிருப்பதால் மார்ச் 19 ஆம் திகதி தங்கள் கட்சி இந்த முடிவை மீளாய்வு செய்யும் எனவும் அறிவித்தனர்.

எதிர்வரும் 25ஆம் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஜனாதிபதியை சந்தித்து தமிழ் தேசிய பிரச்னைக்கான தீர்வு உள்ளடங்கலான இன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பெரும் பிரச்னைகள் பல தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளோம் -என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ-2)

## ஜனாதிபதி...

ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ள வேண்டும்", என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்த அரசாங்கத்தின் இனவாத நடவடிக்கைகளாலேயே மக்கள் வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் அவர் சாடினார்.

ஐக்கிய மக்கள் சக்தி நேற்று நடத்திய போராட்டத்தின் முடிவில் காலிமுகத் திடலில் நிறைந்திருந்த மக்கள் முன் அவர் உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் அதன் பதவிக்காலத்தில் மறைக்கப்பட்ட ஒப்பந்தங்கள் அல்லது துரோகத்தை மேற்கொள்ளாது. தேசத்தின் முன்னேற்றத்திற்காக நாட்டின் குடிமக்களுடன் ஒன்றிணைவது மட்டுமே கட்சி செய்யும் ஒரே ஒப்பந்தம்.

ராஜபக்ஷ அரசின் நடவடிக்கைகளால் இலங்கை தற்போது கடும் நெருக்கடியில் சிக்கியுள்ளது. பல்வேறு அரசியல் ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக பலர் என்னை அணுகினர். தற்போது மக்கள் வரிசையில் நிற்பதற்கு அரசாங்கத்தின் இனவாத கொள்கைகளே காரணம்.

கொத்து மற்றும் கருத்தடை சிகிச்சைகள் தொடர்பில் இட்டுக்கட்டப்பட்ட கதைகளும் பொய்களும் மக்களை துன்புறுத்துகின்றன. ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் அதன் ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற பேரங்கள் அல்லது மோசடி மற்றும் ஊழலை ஒருபோதும் நடத்தாது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் உருவாக்கப்பட்ட அரசாங்கத்திற்கு மாத்திரமே சலுகைக் கட்டணத்தின் கீழ் எரிபொருளை வழங்குவதற்கு மூன்று மத்திய கிழக்கு நாடுகள் உறுதியளித்துள்ளன. நாட்டு மக்கள் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு தயாராக வேண்டும் என்றும் சொன்னார்.

# இந்தியா பறந்தார் பசில்!

கொழும்பு, மார்ச் 16

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் நிதியமைச் சின் செயலாளர் எஸ்.ஆர் ஆட்டிக்கல ஆகியோர் இந்தியாவுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமாக அவர்கள் இருவரும் இந்தியாவுக்கு சென்றுள்ளதாக நிதியமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தின்போது இந்தியாவின் அரச தலைவர்கள் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதாக அறியமுடிகிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையை வழமைக்கு கொண்டுவருவது தொடர்பிலும் இந்தியாவுடன் நிதியமைச்சர் முக்கிய ஆலோசனைகளை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# செப். ஜெனிவா அமர்வுக்கு அரசு இப்போதே வியூகம்!

கொழும்பு, மார்ச் 16

எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 50ஆவது அமர்வு இலங்கை எதிர்கொள்ளும் அடுத்த சவாலாகும். இதனை எதிர்கொள்ள இப்போதே தயாராக வேண்டும். இதற்கு சிவில் சமூகம், புத்திஜீவிகள் உட்பட அனைவரினதும் ஒத்துழைப்பு தேவை என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

சுவிற்சர்லாந்தின் ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடருக்கு இலங்கை வெற்றிகரமாக முகங் கொடுத்ததாகவும் குற்றச்சாட்டுக்களுக்கு தர்க்க ரீதியாக விடயங்களை முன் வைத்து, அவற்றை தெளிவுபடுத்திக்கொள்ள முடிந்ததாகவும் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

வெளிநாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுடன் ஜெனிவாவில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றன எனவும், அவை மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாகவும் அவர் கூறினார்.

"ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் சவால்களும் இலங்கையும்" என்ற தலைப்பில் நேற்று முற்பகல் ஜனாதிபதி ஊடக மையம் ஏற்பாடு செய்த, ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட போதே வெளிவிவகார அமைச்சின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார். இந்த ஊடக சந்திப்பு ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்கவால் நடத்தப்பட்டது.

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் அவர்களின் தற்போதைய அறிக்கையில் அதிக அவதானம் செலுத்தப்பட்டிருந்தது. யுத்தத்தின்போது இடம்பெற்றவை எனக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல்களை விட, சுதந்திர நாட்டின் உள்ளக அரசியல் விடயங்களையே ஆகும்.

அலுவலகத்திற்கு இதுபோன்ற உள் விவகாரங்களை விசாரிக்க உரிமை உள்ளதா? என்றும், அது ஐக்கிய நாடுகளின் சாசனத்திற்கு ஏற்ப உள்ளதா? என்றும் நாங்கள் வினவினோம். பல்வேறு கூட்டங்களை நடத்தி, நாங்கள் பல வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு இந்நிலைமையைத் தெளிவுபடுத்தினோம்.

31 நாடுகள் இலங்கைக்காக பேரவையின் இடைச் செயற்பாட்டுக் கலந்துரையாடலின் போது குரல் கொடுத்தனர். அங்கு இலங்கைப் பிரதிநிதிகளின் பிரதான தர்க்கமாக அமைந்தது, உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக்கூடாது என்பதே ஆகும். ஒரு நாட்டில் ஒரு விடயத்தை செய்வதற்கும் அதில் வெற்றி பெறுவதற்கும் அந்நாட்டின் ஒத்துழைப்பு அவசியம் என்று மேலும் அவர் தெரிவித்தார்.

## சர்வதேச நாணய...

நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் சாங்யங் ரீ தலைமையிலான குழுவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று சந்தித்துப் பேசினார்.

நேற்று முற்பகல் ஜனாதிபதியின் அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இதில், மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலும் பங்கேற்றிருந்தார். (ஐ)

## காணாமல்...

சந்ததியினரின் நலன்களை பாதுகாக்கவும், நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வகையிலும் தற்போது வகுக்கப்பட்டுள்ள கொள்கைகளுக்கமைய அந்த குடும்பங்களுக்கு உதவிகளை வழங்குவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு 17ஆம் இலக்க காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலக சட்டத்தின் மூலம், காணாமல் ஆக்கப்பட்ட நபர்கள் தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு இறப்புச் சான்றிதழ் அல்லது காணக் கிடைக்கவில்லை என்ற சான்றிதழை வழங்குவதற்காக பதிவாளர் நாயகத்துக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த அலுவலகத்தால் கண்டறிப்பட்ட விடயங்களின் அடிப்படையில் பதிவாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட சான்றிதழைப் பெற்றுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின், குடும்பத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியை, ஒருமுறை மாத்திரம் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. (அ)

## எரிபொருள்...

கோரி சங்கம் கடிதம் அனுப்பியிருந்தது. டீசல் விலை அதிகரிப்பின் அடிப்படையில் கட்டண உயர்வு குறித்து பரிசீலிப்பதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

ஆனால், இதை ஏற்காத தனியார் தாங்கி வாகன உரிமையாளர்கள் சங்கம் மேலதிகமாக கட்டணம் உயர்த்தப்பட வேண்டும் என்று கேட்டது. இந்தக் கோரிக்கைக்கு பெற்றோலிய கூட்டுத்தாபனம் இணங்கவில்லை. தனியார் தாங்கி வாகனங்கள் சேவைப் புறக்கணிப்பை தொடங்கியுள்ளன.

நாட்டின் பெற்றோலிய விநியோகத்தில் 80வீதம் தனியார் தாங்கி வாகனங்கள் மூலமே இடம்பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜனாதிபதியின்...

மற்றும் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைத் தொடர்ந்து இந்த உரையை ஜனாதிபதி நிகழ்த்தவுள்ளார்.

இந்த உரையை தொலைக்காட்சி, வானொலிகள் மூலம் நேரலையாக மக்கள் கேட்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கூட்டமைப்பி...

பாராளுமன்ற உறுப் பினருமான எம். ஏ. சுமந் திரன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி நேற்று கொழும்பில் போராட்டத்தாலேயே இந்த சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டதாக அரச தரப்பு வட்டாரங்களால் கூறப்பட்ட போதிலும் இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை.

ஜனாதிபதி - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்திப்புக்கு முன்னரும் இரு தடவைகள் திகதி குறிப்பிடப்பட்டு ஒத்திவைக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu



# எரிவாயு பெறுவதற்காக வரிசையில் நின்றபடி ஊடக மாநாட்டில் பங்கேற்ற ஊடகவியலாளர்!

கொழும்பு, மார்ச் 16

அமைச்சரவை வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது, எரிவாயு பெற வரிசையில் நிற்பவர்கள் மத்தியிலிருந்து ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பிய பரபரப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாராந்த அமைச்சரவை கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பு நடப்பது வழக்கம். நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர், எரிவாயு வரிசையில் நின்றபடி இணைய வழியாக கலந்துகொண்டார்.

2 சிலிண்டர்களில் தனது மடிக் கணினியை வைத்து, அமைச்சரவை ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் கலந்து கொண்ட காட்சிகள் இணையத்தில் வைரலாக வருகிறது.

தற்போது நாட்டில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளை முன் வைத்த ஊடகவியலாளர், அரசாங்கம் எதிர்காலத் திட்டத்தை வகுக்க வில்லையா என கேள்வி எழுப் பினார்.

செய்தியாளருக்குப் பதிலளித்த இணை அமைச்சரவை செய்தித் தொடர்பாளர் ரமேஷ் பத்தரன, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் பல அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையை எதிர்கொள்ள எந்த அரசாங்கமும் விரும்பவில்லை என்று கூறினார்.

மேலும், எந்த அரசும் தனது ஆட் சிக் காலத்தில் நீண்ட வரிசையில் நின்று பொதுமக்கள் அவதிப்படுவதைப் பார்க்க விரும்பவில்லை என்றும் அமைச்சர் கூறினார். (அ)

# மேலும் 112 பேர் குணமடைவு

கொழும்பு, மார்ச் 16

நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து மேலும் 112 பேர் குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய, இதுவரைநாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 619 073 ஆக அதிகரித்துள்ளது. (அ)

# தைத்த ஆடைகளின் விலை 31 சதவீதத்தால் அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 16

மூலப்பொருள்களின் விலை அதிகரிப்பால், நாட்டில் தைத்த ஆடைகளின் விலை, 30- 31 சதவீதத்தால் அதிகரிக்க நேர்ந்துள்ளதாக அகில இலங்கை சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆடைகளுக்கான மூலப்பொருள்களை கொண்டு வருவதற்கு, 40 அடி நீளமான கொள்கலனுக்காக அறவிடப்பட்டு வந்த போக்குவரத்து கட்டணமான இரண்டு இலட்சம் ரூபாய், தற்போது பத்து இலட்சம் ரூபாயாக கப்பல் நிறுவனங்கள் அறவிடுவதாகவும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால் தேசிய தைத்த ஆடைகள் உற்பத்தி துறை பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனால் பலர் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர் என்று அந்த சங்கத்தின் தலைவர் நிருக்ஸகுமார தெரிவித்தார். அத்துடன், நாட்டுக்கு எவ்வித சுமையுமின்றி கிராமிய மக்கள் தம்மிடம் உள்ள தையல் இயந்திரத்தைப் பயன்படுத்தி, ஆடை உற்பத்தியை முன்னெடுத்து வரும் நிலையில், தற்போதைய நிலை பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறினார். (ஐ)

# மதுபான விலைகள் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 16

நேற்று முதல் அமுலாகும் வகையில் மதுபானங்களின் விலைகளை அதிகரிக்க மதுபான நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

இதன்படி, மதுபான விலை உயர்வு தொடர்பிலான அறிவிப்பை அந்தந்த நிறுவனங்கள் நேற்று வெளியிட்டுள்ளன.

அதற்கமைய, “அதி விசேஷம்” 750 மில்லிகிராம் 100 ரூபாவினாலும், 375 மில்லிலீற்றர் 60 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன. மேலும் 180 மில்லிலீற்றர் 30 ரூபாவினாலும் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, உள்ளூர் பியரின் விலை 10 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளன. (அ)

**பயிற்சி ஊடகவியலாளர்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் முன்னணி நாளிதழ் ஒன்றுக்கு பயிற்சி ஊடகவியலாளர்களாக இணைந்து கொள்ள விருப்பமுள்ளவர்களிடம் விண்ணப்பம் எதிர்பார்க்கப்படுகின்றது.



- எழுத்துத்துறையில் ஆர்வமுள்ள
- துடிப்பும் துணிவும் உள்ள
- செய்தித்துறையில் விருப்புள்ள
- சாதிக்கும் எண்ணம் கொண்ட

இளைஞர், யுவதிகள் இதில் இணைந்துகொள்ள முடியும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
075 315 3153
trainingjournalistjaffna@gmail.com

# 3 மாத நாய்க்குட்டியால் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 16

மூன்று மாத நாய்க்குட்டியின் நகக் கீறல் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பண்டத்தரிப்பு , தம்பித்துரை வீதியை சேர்ந்த காருண்யசிவம் ஆனந்தராசா (வயது 48) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் வீட்டில் வளர்க்கப்பட்ட மூன்று மாத காலம் நிரம்பிய நாய்க்குட்டி ஒன்று அவரை கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தனது நகத்தினால் கீறியுள்ளது.

நகத்தினால் கீறி இரண்டு நாட்களின் பின்னர் நாய்க்குட்டி உயிரிழந்துள்ளது.

அந்நிலையில் நாய்க்குட்டி நகத்தினால் கீறியதற்கு உரிய முறையில் சிகிச்சை பெற தவறி இருந்த குடும்பஸ்தர் , நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நீர் வெறுப்பு நோய் அறிகுறிகளுடன் உடல் நல குறைவுக்கு உள்ளாகியுள்ளனர்.

அதை அடுத்து அவரை குடும்பத்தினர் சங்கானை வைத்திய சாலையில் அனுமதித்த நிலையில் அங்கிருந்து யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (அ)

# வெட்டுக்காயங்களுடன் விவசாயி சடலமாக மீட்பு

கரடியனாறு, மார்ச் 16

வயல் காவலுக்கு சென்ற விவசாயி ஒருவர் அவர் தங்கியிருந்த கொட்டகையிலிருந்து வெட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

மட்டக்களப்பு - கரடியனாறு - ஈரக்குளத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், பரசுராமன் ஆறுமுகம் (வயது 54) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

காவலுக்கு சென்றவர் வீடு திரும்பாத நிலையில் அவரைத் தேடிச் சென்றபோதே அவர் வெட்டுக் காயங்களுடன் சடலமாகக் கிடந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கரடியனாறு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)




# மகளைத் தாக்கிய தந்தை கைதானார்

அக்கரைப்பற்று, மார்ச் 16

அம்பாறை - பள்ளிக்குடியிருப்பில் 11 வயது மகளைத் தாக்கிய தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

31 வயதான குறித்த நபர் கடந்த 10ஆம் திகதி சிறுமியை கடைக்கு அழைத்துச் சென்று பிஸ்கெற் பைக்கெற் ஒன்றை திருடிக் கொடுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இதைத் தொடர்ந்து எழுந்த பதற்ற நிலையில், சிறுமியை தள்ளிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். இதில் சிறுமி காயமடைந்திருந் தார். இது தொடர்பான கைபேசி காணொலிகள் சமூகவலைத் தளங்களில் பரவின.

இந்நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறுமி சிகிச்சையின் பின் வீடு திரும்பியுள்ளார்.

சிறுமியின் தந்தையை கைது செய்த பொலிஸார் அவரை நீதிமன்றில் முற் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# மின் கட்டணப் பட்டியலின் அளவிலும் வந்தது மாற்றம்

கொழும்பு, மார்ச் 16

இலங்கை மின்சார சபை தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கிவரும் மின் கட்டண பட்டியலுக்கு பதிலாக, சிறிய மின் கட்டணப் பட்டியல் வழங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சில பகுதிகளில் இவ்வாறு மின்சார சபையினால் சிறியளவான கட்டணம் மாத்திரம் பொறிக்கப்பட்ட மின் கட்டணப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

பழைய கட்டண பட்டியல் புத்தகங்கள் காலாவதியாகிவிட்டதாகவும், புதிய கட்டணப் பட்டியலிடும் புத்தகங்கள் இன்னும் அச்சிட்டு வரவில்லை என்றும் மின்மானி வாசிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் கடதாசி இறக்குமதிக்கான அந்நியச் செலாவணி இல்லாததால் இந்தப் பிரச்சனை ஏற்பட்டிருக்கலாம் என்றும் அவர்கள் கூறுகின்றனர். (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**

*6.00 மணி* : பக்திப்பாடல்கள்
*6.30 மணி* : வணக்கம் டான்



*6.31 மணி* : தினம் ஒரு திருக்குறள்
*6.35 மணி* : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
*6.55 மணி* : இன்றையராசி பலன்
*7.15 மணி* : கதை வழி அறமொழி
*7.20 மணி* : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



*7.30 மணி* : இன்றைய பத்திரிகைகளில்
*8.30 மணி* : காலை செய்திகள்
*9.00 மணி* : கலாட்டா காலை-நேரலை
*10.30 மணி* : தொடர்நாடகம்
*11.00 மணி* : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

**பகல்**

*12.00 மணி* : சிரிக்கலாம் வாங்க-நேரலை
*1.00 மணி* : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
*1.30 மணி* : சுப்பர் சீன்ஸ்-ஆதவன்,ஆயிரத்தில் ஒருவன் திரைப்படங்களின் காட்சிகள்
*4.30 மணி* : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி



*5.30 மணி* : குறுந்திரை நேரம்
*6.00 மணி* : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை

**இரவு**

*7.00 மணி* : பாரதீ - பா.மாலதி மேலதிக தொழிநுட்ப செயலாளர்



*8.00 மணி* : இரவுச் செய்திகள்
*9.00 மணி* : துறைக்கு அப்பால்
*9.30 மணி*: பத்துக்கு 10
*10.00 மணி* : நேருக்கு நேர்

---

**DAN COMEDY HD**

**காலை**

*6.00 மணி* : சிரி சிரி சிரி
*8.00 மணி* : சிரிப்பு சரடிவெடி
*10.00 மணி* : ஒரு பட கொமடி
*11.00 மணி* : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

*1.00 மணி* : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
*3.00 மணி* : குண்டக்க மண்டக்க
*5.00 மணி* : ஒரு பட கொமடி
*6.00 மணி* : கொமடி கலாட்டா

**இரவு**

*8.00 மணி* : ஒரு படக்கொமடி
*9.00 மணி* : சிரிப்போ சிரிப்பு
*10.00 மணி* : விடிய விடிய சிரிப்பு தான்

---

**DAN MUSIC HD**

**காலை**

*6.00 மணி* : பனிப்பூக்கள்
*7.00 மணி* : திசை எட்டும் இசை எட்டும்
*8.00 மணி* : வணக்கம் டான் மியூசிக்
*9.00 மணி* : மெல்லிசை
*10.00 மணி* : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

*12.00 மணி* : ராஜா ராணி
*1.00 மணி* : விசை இசை
*3.00 மணி* : வட்ஸ் அப் (நேரலை)
*4.00 மணி* : டீ டைம் ராகங்கள் (நேரலை)
*5.00 மணி* : இனிது இனிது
*6.00 மணி* : என்றென்றும் இசை
*7.00 மணி* : ஓய்வெடு நிலவே

**இரவு**

*8.00 மணி* : காற்றில் வரும் கீதம்
*9.00 மணி* : நிலவு தூங்கும் நேரம்

---

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

*5.15 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*6.00 மணி* : தரம் 07 - தமிழ்
*6.45 மணி* : தரம் 08 - தமிழ்
*7.30 மணி* : தரம் 09 - கணிதம்
*8.15 மணி* : தரம் 10 - கணிதம்
*9.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
*10.00 மணி* : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
*11.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

*12.00 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*1.00 மணி* : தரம் 07 - தமிழ்
*2.00 மணி* : தரம் 08 - தமிழ்
*3.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
*3.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
*4.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
*5.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
*5.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
*6.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

*7.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

---

**ஓம் ரிவி**

**காலை**

*5.00மணி* : சிவாய மந்திரம்
*6.00 மணி* : சுப்ரபாதம்
*6.30 மணி* : சுப்ரபாதம்
*7.00 மணி* : இன்றைய சிந்தனை
*7.05 மணி* : இன்றைய நாள்
*7.20 மணி* : ஈழத்து சித்தர்கள்
*7.30 மணி* : மங்கள இசை
*8.00 மணி* : அருளுரை
*8.30 மணி* : திருவாசகம்
*9.00 மணி* : திருவிழா-01
*10.00 மணி* : பஜனை
*10.30 மணி* : தமிழககோவில் திருவிழா
*11.00 மணி* : பக்திமலர்

**பகல்**

*12.00 மணி* : திரையில் பக்தி
*12.30 மணி* : திருவிழா-02
*6.00 மணி* : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

*7.00 மணி* : செய்திகள்
*7.30 மணி* : அருளுரை
*8.00 மணி* : திருவிழா-01

---

**CHANNEL HOLY MARY**

**காலை**

*7.00 மணி* : நாளொரு நற்சிந்தனை
*7.30 மணி* : அன்பின் மகிழ்வு குடும்பம்
*8.00 மணி* : ஜெபமாலை
*9.30 மணி* : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
*10.00 மணி*: அன்னை மரியா
*10.30மணி* : திருப்பலி (யாழ்ப்பாணம்)
*11.30 மணி* : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

*12.00 மணி* : திருப்பலி (திருகோணமலை)
*01.00 மணி* : திருப்பலி (மட்டக்களப்பு)
*02.00 மணி* : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
*03.00 மணி* : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
*04.00 மணி*: திருப்பலி (மட்டக்களப்பு)
*05.00 மணி* : திருப்பலி (திருகோணமலை)
*06.00 மணி* : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
*07.00 மணி* : ஞானவழி
*07.30 மணி* : அன்பியம்

---

**Pirai Television**

**காலை**

*6.00 மணி* : கிராத்
*7.00 மணி* : இறை சிந்தனை
*7.30 மணி* : இஸ்லாமிய பாடல்
*8.00 மணி* : கலந்துரையாடல்
*9.00 மணி* : இஸ்லாமிய சீரிஸ்
*10.00 மணி* : மனதோடு பேசலாம்
*10.30 மணி* : கண் வசண்ணம் கை வண்ணம்
*11.00 மணி* : சுவனப்பாதை
*11.30 மணி* : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

*12.00 மணி* : லுகர் அதான்
*12.30 மணி* : இஸ்லாமிய வரலாறு
*1.00 மணி* : இஸ்லாமிய திரைப்படம்
*2.00 மணி* : கஸீதா
*2.30 மணி* : இறை சிந்தனை
*3.00 மணி* : பாடல்கள்
*3.30 மணி* : பள்ளிவாசல் ஆவணப்படம்
*4.00 மணி* : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
*5.00 மணி* : இறை தென்றல்
*6.00 மணி* : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

*7.00 மணி* : பிறை பிரசங்கம்
*8.00 மணி* : இஸ்லாமிய வரலாறு